பக்கங்கள்: பன்னிரண்டு
நூலகம்
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

## VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 16 | வெள்ளிக்கிழமை | (30-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 42

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

### ஐ.ம.சு.முன்னணியின் முதலாவது கூட்டம் நேற்று:

# ஐ.தே.முன்னணியை தேர்தலில் தோற்கடிக்கவே புதிய கூட்டு!

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச உரை

(நமது நிருபர்)

**தற்போது ஆட்சியில் இருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை தனிக்கட்சியாகத் தனித்து நின்று தோற்கடிக்க முடியாது என்ற காரணத்தினாலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இணைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கினோம் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் மக்கள் விடுதலை முன்னணியினதும் கூட்டினால் உருவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் பேசுகையில், வெகுவிரைவில் வரவிருக்கின்ற தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசைத் தோற்கடிக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொள்ளும்.

இதற்காக நாட்டில் உள்ள சகல மக்களையும் ஒன்றிணைத்து புதிய கூட்டமைப்பின் இலக்கை அடையவுள்ளோம். நாட்டில் சிதைவடைந்துள்ள ஜனநாயகத்தை வடக்குக் கிழக்கு உட்பட நாடு தழுவிய ரீதியில் ஒரே முறையில் நிலை நிறுத்த வேண்டிய ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம்.

தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி

(12ஆம் பக்கம் பார்க்க)



## பெப்ரவரி மாதம் முதல் மின் கட்டணம் உயரும்!

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் மின் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளது. இதன்படி ஒரு அலகுக்கான மின் கட்டணத்தை இரண்டு ரூபா 25 சதத்தால் அதிகரிப்பதற்கு மின்சாரசபை அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளது.

தற்போது, முதல் 40 அலகுகளுக்கு வற்வரி விலக்குடன் அலகிற்கு ரூபா 3.50 வீதம் மின்சாரசபை அறவிடுகிறது. நாட்டில் நிலவும் வரட்சி காரணமாக நீர்மின் உற்பத்தியை விட்டு அனல்மின்னைப் பெறுவதற்கு வசதியாகவே இவ்வதிகரிப்பை ஏற்படுத்துமாறு,மின்சார சபை அரசாங்கத்தை கேட்டிருக்கிறது.

அதிகரித்த உற்பத்திச் செலவு காரணமாக எதிர்வரும் பெப்ரவரி முதல் நாட்டின் மின் தேவை அனல் மின்நிலையங்களாலேயே பூர்த்தியாக்கப்படும் எனவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-6)

## மிலேனியம் சிற்றி மீதான முற்றுகை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக்களஞ்சியம் மீதான முற்றுகை நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாயுதக்களஞ்சியம் முற்றுகையிடப்பட்டமை தொடர்பாக ஐந்து இராணுவ வீரர்களினால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கை விசாரணை செய்த ஐவரைக் கொண்ட நீதியரசர் குழு இவ்விடயத்தில் பொலிஸ் அதிகாரியான குலசிறி உடுகம்பொல எவ்வித ஆலோசனையும் இன்றி தன்னிச்சையாக செயற்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சத்திரச் சந்தியில் பொலிஸார்

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண

சத்திரச் சந்தியில் பொலிஸார்

# மது போதையில் ரகளை

## மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மது போதையில் ரகளை புரிந்த பொலிசாரை, மனித உரிமை ஆணைக் குழுவின் வழங்கிய தகவலை அடுத்து யாழ்.பொலிசார் கைது செய்துள்ள னர்.

யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் நேற்றிரவு மதுபோதையில் கடமை யில் இருந்த பொலிஸார் ஒருவர் வீதி யால் வந்த ஆட்டோ சாரதியை கார ணமேதுமின்றி கண்டபடி தாக்கினார்.

இதனை நேரில் பார்த்த மனித உரிமை இல்லத்தில் பணியாற்றும் சட்டத்தரணி ஒருவர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவி த்தார்.

இதனையடுத்து நிலைமையை

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் மட்டும் பேசமுடியாது!

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை க்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தரப்பின ருடனும் பேச்சுவார்த்தை நடாத்த ப்படுமென்று பொது ஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் முதலாவது பொதுக் கூட்டம் கொழும்பு மாநகர சபைத் திடலில் நேற்று இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்; இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண் டியது மிகவும் அவசியமானதாகும் இந்நிலையில் தீர்வுக்காக விடுத லைப் புலிகளுடன் மட்டுந்தான்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இறக்குமதிப் பொருளுக்கு தீர்வைக் குறைப்பு

(கொழும்பு)

அரசாங்கம் இறக்குமதிப் பொருட் களுக்கான தீர்வைகளை குறைப் பதற்கு முடிவு செய்திருப்பதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித் துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் வாராந்த மாநாடு நேற்று இடம் பெற்றது. இம் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தீர்வை நிவாரணம் வழங்கும் வகை யில் கோதுமை மா, பருப்பு, உரு ளைக் கிழங்கு, கருவாடு போன்ற வற்றுக்கு விலைகள் குறைக்கப படும் என்றும், இந் நடவடிக்கை தேர் தலுக்கான சலுகை அல்ல என்றும், அரசு முன்னரே திட்டமிட்டே இதனை மேற்கொள்கிறது என்றும் சொக்ஸி மேலும் தெரிவித்தார். (இ-3)

# குடும்பஸ்தரை வழிமறித்த கும்பல் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தியது

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பஸ்தர் ஒருவரை வழிமறித்த இனந்தெரியாத கும்பல் ஒன்று அவரை மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டியது.

அதிர்ச்சிதரும் மேற்படி சம்பவம் மட்டுவில் வடக்கு சாவகச்சேரியில் நேற்று முன்தினமிரவு 9 மணியள வில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான தெய்வேந்திரன் (வயது21) என்பவரே எரிகாயங்களுக்கு உள் ளானவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் புதன்கிழமை வேலைக்குச் சென்றுவிட்டு இரவு 9 மணியளவில் தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த பிரஸ்தாப நபரை அவரது வீட்டிற்கு அருகில் வைத்து வழிமறித்த இனந்தெரியாத கும்பல் ஒன்று அவர் மீது மண் ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

உடல் முழுவதும் தீச் சுவாலை விட்டு எரியத் தொடங்கியது. நிலத் தில் உருண்டு புரண்டு தீயை அணைக்கும் முயற்சியில் பிரஸ்தாப நபர் ஈடுபட்டார். இருந்தும் தீயின் கொடுமை தாங்க முடியாது கூக் குரலிட அங்கு விரைந்து வந்து அயலவர்கள் தீயை அணைத்து அவரை உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# மனோ-மலிக் நல்லிணக்க குழு இன்று மீண்டும் கூடுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கு மிடையிலான அரசியல் நெருக்க டிக்குத் தீர்வு காணும் பொருட்டு நிய மிக்கப்பட்ட மனோ தித்தவெல - மலிக் சமர விக்கிரம தலைமையிலான நல் லிணக்கக் குழு இன்று மீண்டும் கூடுகிறது.

இன்றைய கூட்டத்தில் சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரதமருக்கு அத்தியாவசியமாக வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் குறித்து, ஆராயப்படவுள்ளதாக அமைச்சர் பேரா

(12ஆம் பக்கம் பார்க்க)

**சிறு விளம்பரம்**

**சிங்கறென் தையல் மெசின் திருத்தகம்**

சகலவிதமான தையல் இயந்திரங்களும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் 28, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்(ஹட்டன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்) (சி-7325)


## சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இனம்தெரியாத சடலத்தை உறவினர்கள் எவரேனும் வந்து பொறுப்பேற்கலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

# சுப்பிரமணியம் பூங்கா வளவில் கழிவுப்பொருட்களைக் கொட்டாதீர்

## யாழ்.மாநகர ஆணையாளர் அறிவுறுத்து

(கொழும்புத்துறை)

சுப்பிரமணியம் பூங்கா,யாழ். மாநகர சபையின் முன்னாள் வளாகம் ஆகியவற்றில் கழிவுப் பொருட்களைக்கொட்ட வேண்டாம் என யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

மேற்படி பகுதிகளில் கோழிப் பண்ணை கழிவுகள், உணவுச் சாலைக் கழிவுகள் ஆகியன கொட்டப்படுவதால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

இதேவேளை, சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-51)

# கொலைச் சந்தேக நபர்கள் குடும்பத்துடன் தலைமறைவு

(கொழும்பு)

கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வைத்து சுட்டுக் கொலைசெய்யப்பட்ட பாதாள உலகக்கோஷ்டியின் தலைவர் தம்மிக்க அமரசிங்காவின் கொலை சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று நபர்கள் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் தலைமறைவாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி சந்தேக நபர்கள் மூவரும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வேறிடங்களில் வசித்து வருவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்து இவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, நீதிமன்றத்தில் வைத்து தம்மிக்க அமரசிங்காவை நேரிடையாகத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்தவர் எனக் கருதப்படும். சமிந்த உதயகுமார தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக தம்மிக்க அமரசிங்காவின் தாயாரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அடிக்கடி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## படையினர் வசமுள்ள பாடசாலையை விடுவிக்கக் கோரி

# தென்மராட்சி வலய அலுவலகம் முன் நேற்று மறியல் போராட்டம்

(தம்பசிட்டி)

படையினரின் பிடியில் உள்ள எழுதுமட்டுவாழ் தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் விநாயகர் ஆலயம் என்பவற்றை மீட்டுத்தருமாறு கோரி, எழுதுமட்டுவாழ் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் முன்பாக அடையாள மறியல் போராட்டம் இடம்பெற்றது.

காலை 9.00 மணி முதல் 3 மணி நேரம் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, நடராஜா ரவிராஜ் ஆகியோரும் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள்,மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மறியல் போராட்ட முடிவில் மேற்படி கோரிக்கைகள் தொடர்பில் மகஜர் ஒன்றும் கையளிக்கபபட்டது.

எழுதுமட்டுவாழ் வடக்கு-மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி ரி. மோகனவதனி, தென்மராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். உதயகுமாரனிடம் கையளித்த அந்த மகஜரில்,

படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இப் பாடசாலை 200மீற்றர் தொலைவில் உள்ள கட்டடத்தில் இயங்குவதால் அங்கு செல்லும் சின்னஞ் சிறார்கள் நீண்ட தூரம் நடக்க வேண்டியுள்ளது.

இதனால் பெற்றோர்களே பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்லவேண்டி இருப்பதால் அவர்கள் தமது தொழில்களைச் செய்ய முடியாதுள்ளது.

இபபாடசாலையில் பயிலும் தரம் 1முதல் தரம் 11 வரையிலும் 215 மாணவர்களின் நலன்கருதி பாடசாலையை மீளவும் சொந்த இடத்தில் இயங்கச் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-45)

## கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளில்

# ஜி.ரி. இசற் நிறுவனம் 150 வீடுகள் அமைப்பு

(இருபாலை)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆறு கிராம சேவகர் பிரிவுகளில் கடந்த இரு ஆண்டுகளில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் 150 வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளது.

ஒவ்வொன்றும் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த இவ்வீடுகள் யாவும் வறுமைக்கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் விதவைகளுக்குமே கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மற்றுமொரு வீடமைப்புத் தொகுதியை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் தற்போது மேற் கொண்டு வருகிறது.

இதற்கமைய வளலாய் கிராம சேவகர் பிரிவில் 15 வீடுகளும் புத்தூர் கிராம சேவகர் பிரிவில் 15 வீடுகளும், சிறுப்பிட்டி மேற்கு கிராம சேவகர் பிரிவில் 10 வீடுகளும், கோப்பாய் மத்தி கிராம சேவகர் பிரிவில் 10 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன். (தி-84)

# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடாத்தும் கண்காட்சிப் போட்டி பெப்ரவரியில் 3 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் வடமாகாண பாடசாலைகளிடையே வருடாந்தம் நடாத்தும் விஞ்ஞான கண்காட்சிப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25, 26,27ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்ளும் கல்லூரிகள் தமது கண்காட்சிப் பொருள் பற்றிய விபரங்களையும் பங்குகொள்ளும் மாணவர்களின் பெயர்களையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு முன்பாக கு.திருக்குமரன், உதவிப் பொதுச் செயலாளர் யாழ்பபாண விஞ்ஞான சங்கம், விவசாய பீடம், யாழ்.பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

இம்முறை மாணவர்களின் போட்டிக் கண்காட்சி பொருள் மட்டுமல்லாது தகவல் தொழில் நுட்பப் பூங்காவினருடைய வியததகு கணனிக் காட்சிகளும், அரச திணைக்களங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினரதும் கண்காட்சிப் பொருட்களும் காட்சிக்காக வைக்கப்படவுள்ளதாகவும யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (உ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒதுங்குகிறது ஸ்ரீ. மு. கா.

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குப் பதிலாக மஜீர்சித்தி லெப்பை தலைமையிலான சுயேச்சைக் குழுவே அட்டாளைச்சேனை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லை என்பதனாலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழுவிற்கு முஸ்லிம் காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)


# திரைப்பட பிரதியாக்கம் தேவை

அண்மையில் தயாரிக்கப்படவிருக்கும் சின்னத்திரைக்கு தரமான கதைகள் தேவை. கதைகள் 40 பக்கங்கள் கொண்டதாகவும் (புஸ்காப்தாள்) இந்த மண்ணின் சமுதாயப் பிரச்சினைகள் மற்றும் இந்த மண்ணிற்கு உயிர்ப்பூட்டும் கதைகளாக அமைதல் வேண்டும். கதைகளில் ஆபாசக் காதல் தவிர்க்கப்படல் வேண்டும். சிறந்த கதையாகத் தேர்ந்தெடுக்கும் கதைக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:**

**Foucas multi media,**

*சுண்டுக்குளி மகளிர் கல்லூரி*

*முன் ஒழுங்கை, சுண்டுக்குளி*

*(ஜெசித்தாரா கட்டிடம்)*

சி-7321


# வாகன வரிப்பணம் செலுத்த கால அவகாசம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வாகன உரிமையாளர் அனைவரும் நடப்பாண்டுக் கான வாகன வரிப்பணத்தை எதிர் வரும் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் செலுத்துமாறு தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் அறிவித் துள்ளார்.

வாகன உரிமையாளர்கள் நடப்பாண்டுக்குரிய வாகன வரிப் பணத்தை எதிர்வரும் மார்ச் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறும்பட்சத்தில், அதன் பின்னர் அவர்களிடமிருந்து அதற்குரிய தண்டப் பணம் அறவிடப்படும்.

அத்துடன் கொடிகாமம் பகுதி யில் உள்ள வாகன உரிமையாளர்கள், பிரதேச செயலகத்தால் மாதாந்தம் நடத்தப்படும் நடமாடும் சேவையின் முதல், இறுதி செவ்வாய்க் கிழமைகளில் இவ் வரிப்பணத்தைச் செலுத்தக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் கொடிகாமம் பகுதியிலுள்ள வாகன உரிமையாளர்கள் தாம் விரும்பின் இச் சேவையில் வரிப்பணத்தைச் செலுத்தலாம் எனவும் தென்மராட்சிப பிரதேச செயலர் மேலும் அறிவித்துள்ளார். (உ-36)

# கச்சாய் கடலேரியில் தேங்காய் மட்டைகளை ஊறவிட படையினர் அனுமதி

(பலாலி)

தென்மராட்சியின் கச்சாய் தென்பகுதியில் அமைந்துள்ள கடலேரியில் அப்பிரதேச மக்கள் தேங்காய் மட்டைகளை ஊற விடுவதற்கும்,அவ்வாறு கடலேரியில் ஊறவிட்ட மட்டைகளை எடுத்துச்செல்வதற்கும் பாதுகாப்பு காரணங்கள் நிமித்தம் கடந்த 3 வருடங்களாக படையினர் அனுமதிக்கவில்லையாதலால் அப்பிரதேச மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர்.

தும்புத்தொழிலை ஆரம்பிக்க வசதியாக தேங்காய் மட்டைகளை கடலேரியில் ஊறவிடுவதற்கு அனுமதி தருமாறு மேற்படி பிரதேச மக்கள் 52வது சேனாதிபதியிடம் விடுத்தகோரிக்கைகளுக்கமைய கடந்த 24ஆம் திகதி இப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் இப்பிரதேச மக்கள் தும்புத்தொழிலை மேற்கொண்டு தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.





# செய்தித் துளிகள்

## கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

தென்புலோலி ஸ்ரீ முதலி மனோன்மணி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.1.00 மணிக்கு இவ்வாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள பிள்ளையார் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளது. இதற்கான அடிகல்லை இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வைபவ ரீதியாக நாட்டிவைக்கவுள்ளார். (உ-35)

## அதிபர் நலன்புரிச் சங்க நிர்வாகிகள்

(கோப்பாய்)

அண்மையில் நடைபெற்ற கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் நலன்புரிச் சங்கப் பொதுக் கூட்டத்தின் போது, நடப்பாண்டு நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகராக இ.சிவஞானசுந்தரம், தலைவராக சி.சித்திரவடிவேல், செயலாளராக மு.விக்கினேஸ்வரன், பொருளாளராக வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், நிர்வாக உறுப்பினர்களாக கெ.சண்முகரட்ணம், இ.குலசிங்கம், இ.தேவராஜா, கா.தர்மரட்ணம் மற்றும் சி.மகேஸ்வரதாசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-79)

## தளபாடங்கள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க இலண்டன் கிளை சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை பாடசாலையின் பௌதீக ஆய்வு கூடத்திற்கும், நூலகத்திற்கும் வழங்கியுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதனிடம் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வி.சேதுநாயகம் இவற்றை அண்மையில் கையளித்தார். (உ-52)

## பிணை அனுமதிகேட்கிறார் திலங்க சுமதிபால

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெற் சபைத் தலைவர் திலங்க சுமதிபால தன்னை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் சர்வதேச கிரிக்கெற் பேரவையின் கூட்டத்தில் தான் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், தம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்கு

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வல் பிரதம விருந்தினராக தொழிலதிபர் வ.சிவசூரியகுமாரனும் சிறப்புவிருந்தினராக வடமராட்சிக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-52)

★ ★ ★

(மருதங்கேணி)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கல்லூரி அதிபர் அன்னபாக்கியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-36)

## வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

அரச முன்னுரிமை நடவடிக்கைக்காக பட்டதாரிப் பயிலுநர்களாக ஆட்சேர்க்கப்பட்டு வேறு பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேறபடி பரீட்சார்த்திகளுக்கான அனுமதியட்டைகள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படுமென வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் வே.பொ.பாலசிங்கம் அறிவித்துள்ளார். (உ)

## துர்க்காகோட்டம் 5ந் திகதி திறப்பு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 'துர்க்கா கோட்டம்' எனும் புதிய மண்டபம் எதிர்வரும் 5ஆம் திகதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

ஆலயத்தின் தென்திசையில் பெரிய அளவில் அமைக்கப்பட்டு வரும் துர்க்காதேவி யாத்திரிகர் மண்டபத்தின் முதற்கட்டமாக "துர்க்காதேவி கோட்டம்" திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## சேக்கிழார் அடிப்பொடியின் தெய்வீகச் சொற்பொழிவு

# கடமையுணர்வுமிக்க வாழ்வு கடவுளை உணர வைக்கும்

சிவபெருமான் தேவதேவன், மாதேவன், சிறப்புடை ஈசன், மூவரின் முதல்வன், ஏகன், முடிவிற்கு முடிவாய் நின்றோன், உயிருக்கு உயிரானான், அந்தணன், ஆதி, எண்குணத்தன், உள்ளும்புறமுமாக எங்கும் நிறைந்தவன், பரிபூரணன், கடவுள்.



அத்தத்துவனை உள்ளும் புறமும் பிரிவின்றி வழிபட்டு என்றும் இன்பம் பெருக்கும் வீட்டின்பத்தை இலக்காகக் கொண்டு செம்மை வாழ்வல் தன்னைப்பயிலுவிப்பவன் சைவன். கற்கண்டு உள்ளும் புறமும் எப்படியொருதன்மையதாக இருக்கிறதோ, அதேபோலப் புறத்தே பூசப்படும் திருநீற்றின் ஒளி போல உள்ளமும் கள்ளமற்ற வெள்ளை ஒளியாக விளங்குபவர்கள். அதனைப் பெரியபுராணம் - 'பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்களே' என்று எடுத்து ஏத்தும்.

## வெள்ளி நற்சிந்தனை

### கடமை கண்போன்றது

விபூதிப் பூச்சும் உருத்திராக்க மாலையும், காவி உடையும் கந்தை ஆடையுமாகப் பண்டாரக் கோலத்தில் பரிமளித்தாலும் கடமை உணர்வில் கண்ணும் கருத்தும் உடையவர்கள். சொல்லும் செயலும் மாறுபாடு இல்லாதவர்கள். இன்முகத்தோடு இனிய மொழி பேசுவார்கள். நினைத்தல் சொல்லல், செயல் என்னும் திரிகரண சுத்தி உடையவர்கள். என் கடன் பணி செய்து கிடப்பதே என நடப்பவர்கள். பூதம் ஐந்தும் நிலை கலங்கினாலும், தேவன் திருவடியைக் கலங்காது கைதொழுவார். ஈர அன்போடு வீரம் மிக்கவர்.

### சிவ வாழ்வே உயர்வு தரும்

மேலே காட்டிய குணாதிசயங்களைக் கொண்டவனே சைவன் எனப்படுவான். வெறும் விபூதிப் பூச்சும் வாய்ப்பேச்சும், ஒருவனைச் சைவனாக்கிவிட முடியாது. சைவம் என்னும் சமயத்தை அனுட்டிப்பவரிடத்தில் சிவசின்னங்களுக்குரிய சிறந்த குணமும் குடிகொள்ள வேணடும். அது வீட்டிற்கோர் விடிவு தரும். நாட்டிற்கோர் நன்மைதரும். உலகிற்கோர் உயர்வு தரும்.

குறித்த நேரத்தில் குறித்த கந்தையைக் கொடுக்க முடியவில்லையே என்று கற்பாறையில் தலையைத் திருக்குறிப்புத் தொண்டர் மோதினார் என்றால் நேரம் தவறாத கண்ணியத்தை என்னென்பது?

உண்ண உணவின் முன் உட்கார்ந்தபோது, கடவுளுக்குக் கல்லெறியும் நினைவு எழலும், கையை உதறிவிட்டுச் சாக்கியனார் ஓடினார் என்றால் அவர் கடமை உணர்ச்சியை என்னென்பது!

சிவபூசையில் வழமையாக எழுந்த சிலம்பு ஒலி கேட்காததனால் உடைவாளை உருவி மார்பில் சேரர் பெருமான் பாய்ச்சினார் என்றால் கட்டுப்பாட்டை என்னென்பது?

தாதை என்று அறிந்தும் சிவபூசையில் செய்த அபராதத்திற்குச் சண்டேசபிள்ளை தாதைதாற் தடிந்தார் என்றால் சைவத்தின் மேன்மை கொள் நீதியை என்னென்பது!

**சிவசண்முகவடிவேல்**

அவர்கள் வாழ்ந்த வாழ்வு சைவவாழ்வு. அது அவர்களுக்குச் சிவலோக வாழ்வை வழங்கியது. உலகிற்குப் புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டிய வாழ்வு. □

# முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து புலிகளுடன் பேச வேண்டும்

## வசீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

பெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையே புரிந்துணர்வு, திறந்த மனப்பான்மை அடிப்படையில் தொடர்ச்சியான

காணமுடியும். இதனடிப்படையில் தான், இவ்விரு சமூகங்களுக்கும் இடையில சுமுகமான உறவுகளை ஏற்படுத்த முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 சதவீத முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும், இவர்கள் அனைவரும் 10சதவீத நிலப்பரப்புக்குள் மிகவும் நெருக்கடியான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவ்விடயம் குறித்தும், முஸ்லிம் மக்களின் ஏனைய பிரச்சினைகள் குறித்தும் தமிழீழ விடுதலைப்

வதேச கிரிக்கெற் பேரவையின் கூட்டத்தில் தான் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், தம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரியிருக்கிறார்.

இதேவேளை, கொழும்பு மஜிஸ திரேட் நீதிமன்றில் இடம்பெற்று வரும் மேற்படி வழக்கு விசாரணையை இடைநிறுத்துவதா? இல்லையா? என்ற தீர்ப்பு நாளை அறிவிக்கப்படவிருக்கிறது. (த)

## ஆயிரத்து 19பேர் சிகிச்சை

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அளம்பில் திலீபன் மருத்துவமனையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆயிரத்து19 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

காய்ச்சல், ஆஸ்துமா மற்றும் சளிக்காய்ச்சல் ஆகிய நோய்களுக்கே கூடுதலானோர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகின்றது. (உ-35)

## இலவச பற்சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் உள்ள கியூ மெடிகா இலவச மருத்துவ சேவை ஸ்தாபனத்தின் பற்சிகிச்சை சேவை யாழ். இரண்டாம் குறுக்கு வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை ஜே/49 கிராம சேவை அலுவலர் ஜே.பத்திநாதனின் ஏற்பாட்டில் பிரதி புதன் கிழமைதோறும் மாலை 5.00 மணிக்கு இவ் இலவச மருத்துவ சேவை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## சேக்கிழார் அடிப்பொடியின் தெய்வீகச் சொற்பொழிவு

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகத்தில் தென்னிந்திய தஞ்சாவூரைச் சேர்ந்த சேக்கிழார் அடிப்பொடி, சைவ சித்தாந்த கலாநிதியும் இலக்கிய கலாநிதியுமான நடராஜன் இராமச்சந்திரன் தெய்வீகச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை மாலை விநாயக மகத்துவம் எனும் பொருளிலும் நாளை ஆலய விழிபாடு எனும் பொருளிலும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை சைவசித்தாந்த வாழ்வியல் எனும் பெருளிலும் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-246)

## செயலாளர் பதவியை ஏற்க மைத்திரி மறுப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியை சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன ஏற்க மறுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியில் இருப்பதால், புதிய முன்னணியின் செயலாளர் பதவியை தம்மால் ஏற்க முடியாது என அவர் காரணம் கூறி வருகிறார்.

இதேவேளை, இம் முன்னணியின் எந்தவொரு பதவியையும் தான் ஏற்கப்போவதில்லையென பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவும் தெரிவித்துள்ளார்.(தி-60)

சியின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வசீர் சேகு தாவுத் தெரிவித்துள்ளார்.

ஓட்டமாவடி நாவலடிக் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்

பிரதிநிதிகளுக்கும் இடையே புரிந்துணர்வு, திறந்த மனப்பான்மை அடிப்படையில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமே பிரச்சினைகளுக்கு தீர்வு

வருகின்றனர்.

இவ்விடயம் குறித்தும், முஸ்லிம் மக்களின் ஏனைய பிரச்சினைகள் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பலனாக மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கிய சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எட்டப்பட்டன.

இந்நிலையில், புதிய உத்வேகத்துடன் இருதரப்பும் பேச்சுவார்த்தைகளை நடத்தி எஞ்சியுள்ள பிணக்குகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்றார். (தி-61)

# துப்பாக்கிகளுக்கு அடுத்த மாதம்முதல் அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் துப்பாக்கிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக உள்துறை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கு அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து பொது மன்னிப்பும் வழங்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனைக்கு அமைய இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக உள்துறை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய பதிவுசெய்யப்படாத பிஸ்டல்கள், ரிவோல்வர்கள், இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவற்றை வைத்திருப்போர் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அவற்றைச் சமர்ப்பித்து தற்காலிக அனுமதிப்பத்திரத்தைப் பெறமுடியும்.

ஆனால், கடந்த 1997ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காலாவதியான அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்காதவர்களுக்கு இந் நடைமுறை செல்லுபடியாகமாட்டாது.

இவவாறான அனுமதிப் பத்திரம மாவட்டச் செயலாளர் ஊடாகவே புதுப்பிக்கப்படவேண்டும். (தி-61)


யாழ்.நகரில் முதன் முதலாக





பொருட் கண்காட்சியும் மணப்பெண் அலங்கார காட்சிகளும்

எதிர்வரும் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் பொருட் கண்காட்சி ஆரம்பமாகும். மாலை 3.00 மணியளவில் யாழ். மக்களை வியக்கவைக்கும் வகையில் வர்ண மின் ஒளியில் இந்து, கிறிஸ்தவ, பௌத்த, குஜராத்தி மணப்பெண்கள் அலங்காரத்துடன் தமது மதங்களுக்கு ஏற்ற முறையில் உலா வரும் காட்சிகள் இடம்பெறும் காணத் தவறாதீர்கள்.



பொஸ் அழகுக்கலை நிறுவனத்தின் மாணவர்கள்

(7321)

# புரையோடிப்போன போரினின்றும் மீண்டெழும் ஈழம்வாழ் இந்து மக்களின் வாழ்வு மேம்பட தாய் நாடான தமிழகத்தின் துணை இன்றியமையாதது

## திருவாவடுதுறை ஆதீனத்தில் அமைச்சர் மகேஸ்வரன் அறைகூவல்

**திருக்கையிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் ``அறப்பணிச் செல்வர்'' என்னும் பட்டத்தை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனுக்கு வழங்கிக் கௌரவித்த சமயம் திருவாவடுதுறை ஆதீனத்தில் அமைச்சர் ஆற்றிய உரையின் தொகுப்பு.**

'சிவபூமி' என்று போற்றப்படும் சேய் நாடாகிய இலங்கை நாட்டில், சைவ சித்தாந்தத்திலும், கந்தபுராண கலாசாரத்திலும் ஊறித் திளைத்த சமயப் பெரியார்கள் சைவத்தையும் தமிழையும் தம்மிரு கண்களாகப் போற்றி வந்தார்கள். இன்றும் அந்தப் பாரம்பரியம் தொடர்கின்றது. ஈழத்தமிழர் ஆற்றும் சமயப் பணிகளுக்கும் தமிழ்ப் பணிகளுக்கும் தமிழகம் என்றுமே உறுதுணையாக இருந்து வந்திருக்கின்றது.

ஐந்தாம் குரவர் என சைவ உலகம் போற்றுகின்ற நாவலர் பெருமானுக்குத் தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீனம் 'நாவலர்'' என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியதை நாம் என்றென்றும் நினைவு கூருகின்றோம்.

ஈழத்திலே சைவம் குன்றி பிற மத நிறுவனங்கள் மேலோங்கியிருந்த காலத்தில் சைவ மக்கள் கதியற்றவராய் கலங்கிநின்ற தருணத்தில், ஈழத்து ஞானசூரியனாக அவதரித்த நல்லூர் ஆறுமுகன் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய சிறப்பின் காரணமாக ஆறுமுக நாவலரானார். நாவலர் பெருமானுக்குப் பட்டமளித்து கௌரவித்ததோடு மட்டுமன்றி, பிற அரசருக்கே உரிய மரியாதையோடு பல்வகை வாத்தியங்களோடு பட்டணப் பிரவேசம் செய்வித்து உலகறியச் செய்த பெருமையையும் எமது மக்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்து நிற்கின்றார்கள்.

### அளவிடமுடியாப் பணி

14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வடஇந்தியாவில் முகம்மதியர் செல்வாக்கு மேலோங்கியிருந்த காலத்தில் தெற்குநோக்கிப் படையெடுத்த அவர்கள் தமது அரசை விஸ்தரித்துக் கொள்வதிலும், தமது சமயத்தைப் பரப்புவதிலும் முனைந்து நின்றனர். அக்காலகட்டத்தில் விஜய நகர மன்னர்கள் ஆட்சி தென்னகத்தே நிலவியபோது பெருமளவு மடாலயங்கள் தமிழகத்தில் தோன்றின. சமய கட்டுக்கோப்பும், சமூக அமைப்பும் குலைந்து போகாவண்ணம் காப்பதில் மடாலயங்கள் வகித்த பங்கு அளவிட முடியாதது.

இந்துப் பண்பாட்டையும் வேத ஆகம கோட்பாடுகளையும் கட்டிக் காக்கும் நிலையங்களாக ஆதீனங்கள் விளங்கின. ஆதீனங்களின் பணிகளை அடியொற்றி பிற்கால நாயக்க மன்னர்கள், தஞ்சாவூரை ஆட்சிசெய்த மராட்டியர் போன்றோர்கள் அவற்றுக்கு மானியங்களை வழங்கி மடங்கள் சீரிய முறையில் செயற்பட ஆதரவு வழங்கினர்.

ஆதீனங்கள் சிறப்பான மரபுகளையும் சம்பிரதாயங்களையும் கொண்டு அமைந்தன. ஆதீனத்தில குருமுதல்வர் இறைவனின் பிரதிநிதியாகப் போற்றப்படுவது மரபு. ஆதீன முதல்வர் இறைவனது பிரதிநிதியாகக் கருதப்பட்டு ஒரு நாட்டிற்கு அரசன் செங்கோலோச்சுதல் போல ஞானச்செங்கோலோச்சுகின்றனர். தேவாரத் திருமுறைகளிலே முறையான தேர்ச்சியும் இசையையும் பெற்றோர் ஓதுவார் பெருமக்களாக நியமனம் பெற்றதோடு, கிராமந்தோறும் சென்று அவர்கள் இன்னிசையோடு தேவாரத்திருப்பதிகங்களைப் பாடிப்பரவினர்.

### பல்கலைக்கழகம்

திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகளாக நூற்றுக்கணக்கான நூல்களை வெளியிட்டுள்ளது. இலக்கண, இலக்கிய நூல்கள், தல புராணங்கள், சமயப் பிரபந்தங்கள் என்பன இவற்றுள் அடங்கியிருந்தன. தமிழ் கற்பிக்கும் தமிழ்க் கல்லூரியாகவும், இசை வளர்க்கும் இசைக் கல்லூரியாகவும் மட்டுமன்றி பல்வேறு திறமைகளையும் மாணாக்கருக்கு ஊக்குவிக்கும் ஒரு நிலையமாக விளங்கிய காரணத்தால் திருவாவடுதுறை ஆதீனம் ஒரு சைவநெறி நிற்கும் பல்கலைக் கழகமாகவே மிளிர்கின்றது.


இலங்கை நாட்டை இங்கு அறியாதார்கள் இல்லையெனலாம். நாயன்மார்களால் பாடல்பெற்ற திருத்தலங்களும், அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய கதிர்காமம் போன்ற புண்ணிய ஷேத்திரமும், பஞ்ச ஈஸ்வரங்களும், உயர்ந்த கோபுரங்களுடன் கூடிய நூற்றுக்கணக்கான ஆலயங்களும் நிறைந்த நாடு இலங்கை. ஐரோப்பியர் ஆட்சிபுரிந்த காலகட்டத்தில் அவர்களால் ஆலயங்கள் பல இடித்து அழிக்கப்பட்டன. மக்கள் சமயத்தின்பால் கொண்டிருந்த அதீத ஈடுபாடு காரணமாக மீண்டும் அவை நிலைபெற்றன. ஆகம விதிமுறைகளுக்கு ஏற்ப அமைந்த ஆலயங்களிலே கிரியைகளும் பூசைகளும் இடையறாது நிகழ்ந்தன. ஈழத்துப் புலவர்கள் பலரால் தல புராணங்கள் பாடப்பட்டன. அவ்வாறே சமய இலக்கியங்கள் பெருந்தொகையாக எழுதப்பட்டன. தமிழகத்து சான்றோர் சமயப் பெரியோர்கள் அடிக்கடி ஈழத்திற்கு விஜயம் செய்து எமது ஆன்மீகப் பயிர்செழிக்க உதவி வந்துள்ளார்கள். ஆயினும், கடந்த இரு தசாப்த காலமாக ஈழத்தமிழர் பட்ட துன்பங்கள் சொல்லும் தரமன்று. அது ஒரு அவலத்தின் சோகவரலாறு. இனப் போரின் காரணமாக நாம் அனைத்தையுமே இழந்தோம். எமது வாழ்வின் நிலைகளங்களாக இருந்த அனைத்தும் சீரழிந்தன. குறிப்பாக ஆயிரக்கணக்கான ஆலயங்கள் யுத்தத்தின் கொடுமையால் சிதைவுற்று போயின. இவற்றின் விளைவுகள் எமது ஆன்மீக வாழ்விலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. காலம் காலமாக நாம் பேணிவந்த எமது கலாசார விழுமியங்கள் எமது சமூக கட்டுக்கோப்புடன் சீரழிந்து எமது மக்கள் புகலிடம் தேடி வேற்று நாடுகளுக்கு செல்லுகின்ற ஓர் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

### இறைவன் அருளால் உய்வடைகிறோம்

இருபது ஆண்டுகாலப் போர் ஏற்படுத்திய அனர்த்தங்களும் வடுக்களும் எம்மை நிலைகுலையச் செய்தன. இறைவன் திருவருளால் தற்பொழுது ஒரு சமாதானம் இலங்கையிலே நிலவுகின்றது. இந்த தருணத்திலே இடிந்து அழிந்துபோன எம் ஆலயங்கள் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு குடமுழுக்கு நிகழ்த்தப்படுகின்றன. தெய்வ சாந்தி பொலியச் செய்யவும் சமூக ரீதியில் மக்கள் மேம்பாடு அடையவும் பாரிய பல பணிகளை ஆற்றவேண்டிய கடப்பாடு உடையவர்களாயுள்ளோம்.

இந்த அமைச்சுப் பொறுப்பையேற்று இரண்டு ஆண்டுகள் என்ற ஒரு குறைந்த ஒரு காலப்பகுதியில், சில சிறப்பான பணிகளை என்னால் ஆற்ற முடிந்தது. குறிப்பாக கடந்த ஆண்டு மே மாதம் இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது உலக இந்து மாநாடு எமது பணிகளின் சிகரமாக அமைந்தது. உலகின் பல பாகங்களையும் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். தொடக்க நாள் வைபவத்தை நாட்டின் பிரதமர் தொடக்கி வைத்தார். மாவட்ட நகரங்கள் பூராவும் விழாக்கோலம் பூண்டது. இந்த மாநாடு மனதளவிலே மிகவும் சோர்ந்து போயிருந்த சைவ மக்களுக்கு புத்தெழுச்சியையும் உத்வேகத்தையும் அளிப்பதாக அமைந்தது. அதுமட்டுமன்றி இன்னும் சீரிய பணியை நாம் ஆற்றுவதற்கு எமக்கு வலிமையும் தந்தது.

இம் மாநாட்டைப் போன்றே கடந்த ஆண்டு எமது அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க, தீபாவளித் திருநாள் இலங்கை அரசாங்கத்தினால் தேசிய தீபாவளி பண்டிகை திருநாளாக பிரகடனப்படுத்தப்பட்டதோடு தீபாவளியின் சிறப்பைக் குறிக்கும் சிறப்பு முத்திரையும் வெளியிடப்பட்டது. இவை தவிர எமது அமைச்சிற்கு கிடைக்கும் குறைந்தளவு நிதி வளத்தைக் கொண்டு நாம் யுத்தத்தின் காரணமாக சேதமுற்ற ஆலயங்களைப் புனரமைப்பதற்கும் கட்டியெழுப்புவதற்கும் உதவி வருகின்றோம். நாடெங்கிலும் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் நூல்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு சீருடைகளும் வழங்கும் திட்டம் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



ஆலயத்தோடும் அறப்பணிகளோடும் நின்றுவிடாது சமூகக் கட்டுமானப் பணிகளையும் எமது அமைச்சு முன்னெடுக்கின்றது. யுத்தத்தினால் வீடு இழந்தோருக்கு வீடுகள் அமைத்துத் தரப்படுகின்றன. எம்மிடம் ஆதரவு நாடி வருகின்ற மிகவும் வறுமைப்பட்ட இந்து பிணியாளர்களின் சிறப்பு மருத்துவத்திற்காக நாம் பொருளுதவியும் ஆதரவும் நல்கிவருகின்றோம்.

ஆயினும், நாம் செல்லவேண்டிய தொலைவு மிகத் தூரம். இலங்கை வாழ் இந்து மக்கள் பரிபூரண சுதந்திரத்தோடு தமது ஆன்மீகக் கடமைகளை நிறைவாக நிறைவேற்றி அச்சமும் அவலமும் இன்றி வாழும் நாள் வரும்வரை நாம் ஆற்றவேண்டிய கடமைகள் நிறையவே உள்ளன.

இலங்கை வாழ் இந்து மக்களுக்கு அவர்தம் ஆன்மீக வாழ்வு மேம்படுவதற்கு தாய் நாடாகிய தமிழகத்தின் துணை மிகவும் இன்றியமையாதது. தமிழக சான்றோரும் ஆதீனப் பெருமக்களும் இதற்கு உதவவேண்டுமாய் யாம் இறைஞ்சிக் கேட்டுக்கொள்கின்றோம். தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையே உறுதியான ஆன்மீகப் பாலம் அமைப்பதே எமது பிரதான இலக்காக உள்ளது. இதற்கான வாய்ப்பினை திருவாவடுதுறை ஆதீனம் ஏற்படுத்திக் கொடுத்தமை ஈழத்துத் தமிழ் மக்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சியை அளிக்கின்றது.

திருமுறைகளும் செந்தமிழும் சிறந்தோங்கி ஆலயங்களும் அறநிலையங்களும் ஆட்சிசெய்யப்படும் திருக்கையிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர்சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாணையின் பிரகாரம் எனக்கு வழங்கப்படுகின்ற 'அறப்பணிச் செல்வர்' என்னும் பட்டம் அடியேனை உள வலிமையோடு பணிகளை ஆற்ற அருள்புரியும் என நம்புகின்றேன். □


உ
கணபதி துணை
காரைநகர் வாரிவளவு
ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
மஹா கும்பாபிஷேக தெய்வீகச் சொற்பொழிவு







சொற்பொழிவாளர் தென்னிந்தியா, தஞ்சாவூர் சேக்கிழார் அடிப்பொடி, சைவசித்தாந்த கலாநிதி, இலக்கியகலாநிதி,
நடராஜன் இராமச்சந்திரன்
B.A.,B.L.,D.Lit. (Hon.)

30. 01. 2004 வெள்ளிக்கிழமை மாலை விநாயக மகத்துவம்
31. 01. 2004 சனிக்கிழமை மாலை ஆலய வழிபாடு
01. 02. 2004 ஞாயிற்றுக்கிழமை காலை சைவ சித்தாந்த வாழ்வியல்

மஹா கும்பாபிஷேகம்
01.02.2004 ஞாயிற்றுக்கிழமை

மஹா கும்பாபிஷேக நிகழ்வில் யாழ்ப்பாணத்து பிரபல தவில், நாதஸ்வர கலைஞர்களின் இசை ஆராதனை இடம்பெறும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்,
வாரிவளவு,
காரைநகர்.
இங்ஙனம்
தேவஸ்தான நிர்வாகத்தினர்
(சி-7322)


## சங்கக் கிளை இடமாற்றம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் இதுவரை காலமும் தனியார் வீடொன்றில் இயங்கிவந்த 21ஆம் இலக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை தற்போது கொழும்புத்துறை 3ஆம் குறுக்கு வீதியில் உள்ள கட்டடம் ஒனறுக்கு மாற்றப்பட்டுள்ளது.(உ-51)

## உயிரியல் பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உயிரியல் பாட ஆசிரியருக்கான கருத்தரங்கு ஒன்று தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் உள்ள மீன்பிடியியல் துறைசார் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (உ-19)

## ரயில்சேவை விஸ்தரிப்புக்கு ஐரோப்பிய ஆணைக்குழு உதவி

(கொழும்பு)

கிழக்கு மாகாண ரயில்சேவை விஸ்தரிப்புப் பணிகளுக்கு ஐரோப்பிய ஆணைக்குழு 25கோடி ரூபா நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி ஆணைக்குழுவின் நிதி உதவியின்கீழ் வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு வரையிலான ரயில் பாதைகள், புகையிரத நிலையங்கள், பயணிகள் விடுதிகள் என்பன புனரமைக்கப்படுவதுடன், மன்னுப்பிட்டியில் இருந்து மட்டக்களப்பு வரையிலான தொலைத்தொடர்பு வலையமைப்பு சமிக்ஞை என்பனவும் புதிதாக நிறுவப்படவுள்ளன.

இது தொடர்பான உடன்படிக்கையில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் அதிகாரிகளும், போக்குவரத்துத்துறை அமைச்சின் அதிகாரிகளும் கைச்சாத்திட்டுள்ளனர்.(தி-61)

# மெய்வல்லுநர்களுக்குப் பயிற்சியளிக்க வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்

## முதல் தடவையாக மூவர் இலங்கை வந்துள்ளனர்

இலங்கையின் மெய்வல்லுநர் துறையினை விருத்தி செய்யும் முகமாக உக்ரைனைச் சேர்ந்த மூன்று பயிற்றுநர்களை இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு வரவழைத்துள்ளது.

நாட்டில் மெய்வல்லுநர் துறையை வளர்த்தெடுக்கும் முகமாக முதன் முதலாக மூன்று வெளிநாட்டுப் பயிற்றுநர்களின் சேவையை ஒரே தடவையில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு பெற்றுக்கொள்ளவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தப் பயிற்றுநர்களின் சேவையினை ஆராய்ந்து பார்ப்பதற்காக விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மெய்வல்லுநர் துறை வீர, வீராங்கனைகளுக்கு மெய்வன்மை உடற் திறமைகளைப் பயிற்றுவிப்பதற்காகவும் வெளிநாட்டுப் பயிற்றுநர் ஒருவரின் உதவியைப் பெறவுள்ளதாக அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கைக்கு வருகைதந்துள்ள மேற்படி மூன்று உக்ரைன் நாட்டு பயிற்றுநர்களின் கீழ் இலங்கை மெய்வல்லுநர் கனிஸ்ட அணி பயிற்சி பெறவுள்ளது. நெடுந்தூர ஓட்டப் பயிற்சிகளை வழங்குவதற்காக மிக்கலோ பக்ஹன்னோவும் மேலும் குறுந்தூர ஓட்டப் பயிற்சிகளை வழங்குவதற்காக ஜிமாக்ரோ வன்றியஸ் உயரம் பாய்தல் போட்டியில் பயிற்சிகளை வழங்குவதற்காக எல்டென் செவ்வியும் அழைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை அழைத்தமை குறித்து உள்ளூர் பயிற்றுவிப்பாளர்கள் பிரச்சினைகளை எழுப்பக்கூடாது என்று இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை மெய்வல்லுநர் துறை அனைத்தும் எமது நாட்டின் சொத்து என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. சுசந்திக்கா போன்ற முன்னணி வீராங்கனைகள் கூட தனிப்பட்ட பயிற்றுநரின் சொத்தாகக் கருதமுடியாது. இவர்கள் யாவரும் அரசாங்கத்தின் தேசிய சொத்தாகவே அரசாங்கம் கருதுகின்றது. இதற்கு ஏற்ப தேசிய செயற்திட்டத்திற்கு அமையவே நாம் அனைவரும் செயற்படவேண்டும். இதனை யாரும் குழப்பிக் கொள்ளக் கூடாது, ஒழுக்கம் பேணப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் அவர்களுக்கு விருப்பமில்லை என்றால் விலகிக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்திருந்தார்.

நீண்டகால பயிற்சித்திட்டத்திற்கு அமைய இந்தப் பயிற்சித் திட்டமிடலை இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இவ் மூன்று உக்ரைன் நாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் கீழ் இலங்கையின் கனிஸ்ட மெய்வல்லுநர் அணியைச் சேர்ந்த 54 வீர வீராங்கனைகள் பயிற்சி பெறவுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கத்தின் தலைவரான சுனில் ஜெயவீர தெரிவித்துள்ளார்.(உ-68)



மெல்பேர்னில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ரஷ்ய வீராங்கனை மிஸ்கினாவுடனான டென்னிஸ் ஆட்டத்தின் போது கணுக்காலில் காய முற்ற பெல்ஜியம் வீராங்கனை கிம்கிளைஸ்டர்ஸுக்கு சிகிச்சை அளிக்கிறார் மருத்துவர்.

# நெடுந்தீவுப் பிரதேசமட்ட விளையாட்டுவிழா நாளை

நெடுந்தீவுப் பிரதேச மட்ட விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை மாலை 2.30மணிமுதல் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ்.பேரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எகஸ். செல்வ நாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக தீவக சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளரான என.கண்ணன் யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளரான ரி.மாதுளன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.அரசரட்ணம், நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி எஸ்.கிருஸ்ணதாஸ், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் எஸ்.கோபால சிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டிகளாக 100 மீற்றர், 200மீற்றர், 400மீற்றர் மற்றும் 4x400 மீற்றர் அஞ்சல் ஆகிய போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும் நடைபெறவுள்ளதுடன் இடைவேளை நிகழ்ச்சியாக நெடுந்தீவு மகாவித்தியாலயம், நெடுந்தீவு றோ. க.மகளிர் கல்லூரி மற்றும நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றின் பாண்ட் வாத்திய இசை அணி வகுப்பும் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது.

(உ-68)

# கோப்பாய்க் கோட்ட மட்டத்தில் வலைபந்து, கரபந்து போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 19 ஆம் திகதி கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற போது கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையில் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வலைபந்தாட்ட மற்றும் கரபந்தாட்டச சுற்றுப் போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள கோட்ட மட்ட வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு:

**(15 வயது பிரிவு)**

யா/அத்தியார் இந்துக்கல்லூரி எதிர் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

யா/கோப்பாய் மகாவித்தி. எதிர் யா/ஆவரங்கால் மகாவித்தி.

யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை எதிர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

**(17 வயதுப் பிரிவு)**

யா/அத்தியார் இந்துக்கல்லூரி எதிர் யா/அச்செழு சைவபிரகாசம் வித்தி.

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. எதிர் யா/ கோபபாய் கிறிஸ்தவ கல்லூரி.

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் யா/கோப்பாய் ம.வித்தி.

யா/ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி எதிர் யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.

**(19 வயதுப் பிரிவு)**

யா/நடராஜஇராமலிங்க வித்தி. எதிர் யா/அத்தியார் இந்துக் கல்லூரி அன்றைய தினம் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் பி.ப.1.30 மணிக்கு நடைபெறவுள்ள கோட்ட மட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில பங்கு பற்றும் பாடசாலைகளின் விபரம் வருமாறு:

**(15 வயதுப் பிரிவு)**

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி.

யா/சோமஸ்கந்தா கல்லூரி எதிர் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

யா/ இடைக்காடு மாகவித்தி. எதிர் யா/ஆவரங்கால மகாவித்தி.

**(17 வயது பிரிவு)**

யா/அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யா/ சோமஸ் கந்தா கல்லூரி.

**(19 வயது பிரிவு)**

யா/சோமஸ் கந்தக் கல்லூரி எதிர் யா/இடைக்காடு மகாவித்தி.

(உ-79)



கொலராடோவின் அபென் அரங்கில் நடைபெற்றுவரும் ''மோட்டோ எக் பெட்டிரிக்'' என்ற மோட்டார் சைக்கிள வீரர்களுக்கான போட்டியின் போது, உயரமான இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிளுடன் குதித்து வானில் சாகசம் காட்டிய அமெரிக்க வீரர்.

# தென்மராட்சிப் பிரதேச மட்ட கரபந்தாட்ட போட்டிகள்

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டி நிகழ்வுகள் நாளையும் நாளை மறுதினமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாகத் தென்மராட்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்குமார் அறிவித்துள்ளார்.

நாளை காலை 9.00மணிக்கு ஆரம்பமாகி இறுதி இரு தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இப் போட்டி நிகழ்வுகளில் கலந்துகொள்ள விண்ணப்பித்த கழகங்கள், குறித்த நேரத்திற்கு வருகைதந்து தங்களது பங்குபற்றும் வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளை, நாளை காலை 9.00மணிமுதல் பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி நிகழ்வுகள் மடடுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் இப் போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பித்த கழகங்களை குறித்த நேரத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

## சென். அன்ரனிஸ் வி.க.வுக்கு 3வருட போட்டித்தடை

(சுண்டுக்குளி)

யாழ்.உதைபந்தாட்ட லீக் அதில் அங்கம் வகிக்கும கழக அணிகளுக்கு இடையில் நடாத்தி வந்த விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஓர் அங்கமாகக் கடந்த 19ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பாஷையூர் சென் அன்ரனிஸ் அணிக்கும், நாவாந்துறை சென்.நிக்களஸ் அணிக்கும் இடையில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டம் நிறைவு பெறுவதற்கு 3 நிமிடங்கள் மட்டும் இருக்கையில, ஆட்டத்திற்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றிய ரி.கருணாகரன், சென். அன்ரனிஸ் வீரர்களால் தாக்கப்பட்டதனால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இவ் அசம்பாவிதம் தொடர்பாக லீக்கின் ஒழுக்காற்று நடவடிக்கைக் குழுத்தலைவர் எஸ். ரி.கணநாதன் தலைமையில் யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் மாதுளன் முன்னிலையில் அணமையில் நடைபெற்ற விசாரணையில் கீழ்க்காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

* சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தையும், வீரர்களையும் 3வருடத்திற்கு, அதாவது 25.01.2007 வரை இடைநிறுத்திவைப்பது.

* சென்.அன்ரனிஸ் விளையாடடுக்கழக வீரர்களான சுமித், ஜோன்சன் ஆகியோரை 5வருடங்களுக்கு இடைநிறுத்தி வைப்பது அத்துடன் வீரர் "கோபேட்டை 3 வருடங்களுக்கு இடைநிறுத்தி வைப்பது.

* சென.நீக்கலஸ் வீரர் வி.கிட்ளர் போட்டி முடிவடைந்த பின் நடந்துகொண்ட அநாகரிகமான முறை தொடர்பாக லீக் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளது. எனவே கழகம் இவரின் நடவடிக்கை தொடர்பாக விசாரணை செய்து உரிய தண்டனை வழங்குவதுடன் இது தொடர்பான முழு விபரங்களையும் லீக்கிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இதேவேளை, மேற்படி விசாரணைகளின் போது பிரசன்னமாகிய சென. அன்ரனீஸ் விளையாடடுக்கழக வீரர் சுமித் தனது பிழையை ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-110)

## விளையாட்டுப் போட்டி

(தம்பசிட்டி)

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பாடசாலை அதிபர் மு.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

(தி-45)

வெள்ளி முற்றம்

# நிலவோ நெருப்போ?

புகையிலைக் கன்றுகள் கொய்யா இலைக் கூட்டை உடைத்துக் கொண்டு கூவத்தொடங்குகிற சேவல் அளவுக்கு வளர்ந்து,தலையை வெளியே எட்டிப பார்க்கிற காலம். நெல்லியடிச் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் றோட் டில் அரைக் கட்டைத் தூரத்தில் தெருவோரகமாக கிளை பரப்பி சடைத்து வளர்ந்திருக்கிறது, ஒரு சொத்திப்பூவரச மரம். அதனடியில் மாலை தோறும் குழைக்கடை கூடுவது வழக்கம். புகையிலை பயிராகும் போகத்தில் இந்தக் குழைக்கடையில் வடமராட்சித் தமிழ்வழக்குப் பிறந்த மேனியாகக் காட்சி தரும்! சனசந்தடியும், சரளமான விரசப் பேச்சும் இரைச்சலும் சேர்ந்து நெல்லியடிக் கறிக் கடையை ஞாபக மூட்டும்! மேற்கிலும் கிழக்கிலும் இரண்டு மூன்று கட்டை தூரத்திற்கு அப்பால் இருந்தே குடியானவப் பெண்கள் பாவட்டம் குழையையும், குயிலங் குழையையும் கட்டுகளாகக் கட்டித் தலையிற் சுமந்துகொண்டு வந்து குழைக் கடையில் பரப்புவார்கள். வளர்ந்து வரும் புகையிலைக் கன்றுகளுக்கு “அட்டம்” தாழ்க்க பாவட்டங் குழையும் குயிலங்குழையும் வாங்குவதற்காக ஊர்க் கமக்காரர்கள் அங்கு வந்து கூடுவார்கள்.

குழைக்கடைகூடிவிட்டால் முருகேசபிள்ளை தான் அங்கு முடிசூடா மன்னர்- கடந்த ஏழு வருடங்களாக இவர் தான்அங்கு தரகர். இவருக்கு எதிராக ஒரு பொடிப்பயல் கூட அங்கு வாலாட்ட முடியாது. குழைக்கடை மாத்திரம் இல்லை, அந்தச் சுற்று வட்டாரமே இவருடைய குடும்பதிற்கு குத்தகைச் சொத்துமாதிரி. கிராமச் சங்கத்தலைவர் இவருடைய பெரிய தகப்பன், விதானையார் இவருடைய ஒன்று விட்ட சகோதரன்; இவருடைய தாத்தாவின் அப்பா அவருடைய காலத்தில் இரு மரபுத்துய்ய வந்த பெரு நிலக்கிழார். இவரோ தனது காலத்தில் எடுப்புச்சாய்ப்பான ஆம்பிளை. ஊர் நாட்டாண்மைக்காரர்.

ஜன இரைச்சலை அமுக்கிக் கிளித்துக்கொண்டு கேட்கக்கூடிய சிம்மக் குரல் வேட்டைத்திருவிழாக் குதிரை வாகனம்போல மேலெழுந்து எட்டிப் பார்க்கிற மூக்கு. சொந்த ஊர்ப் புகையிலையல் சுருட்டிய சுத்தை’ப் பிரத்தியேகமாகச் சப்பிச்சப்பி உமிழ்ந்தபடி இருக்கும் வாய். குறைவெறியில் கொதித்து மின்னிக் கொண்டிருக்கும் பெரியகண்கள். வாய்க்கால் ஓரமாக அடர்ந்து வளரும் அறுகம் புல்லுப்போல உரோமம் படர்ந்த நெஞ்சுக்கட்டு. பரணி பிடித்த புகையிலையின் கருமைகாட்டும் உடம்பு, கள்ளு முட்டி போல வயிறு; சற்றுத் தாழக்கட்டிய புழுதி மண்டிய வேட்டி: மேலே வரிந்து சுற்றிய சவுக்கம். இவற்றோடு நெற்றியில் சந்தனப் பொட்டும் அணிந்திருந்தார் என்றால் அன்று நிச்சயமாக ஒரு வெள்ளிக்கிழமையாக இருக்கும். இவர் தான் தரகர் முருகேசபிள்ளை;

குழைக்கட்டு ஒன்றுக்குத் தரகுக் கூலி ஐந்து சதம் தான். ஆனாலும் கள்ளுச் செலவுக்கும், காலை மாலைச் சாப்பாட்டுக்கும் எப்படியும் அவருக்கு நாளாந்த வரும்படி நாலு ரூபாவுக்குக் குறையாது. குழைக் கடைக் காலம் முடிந்தால் மாட்டுத் தரகு வரும். அது முடிந்தால் ஓலைத் தரகு. இதற்கிடையில் புகையிலை பயிராகி விடும். பிறகு புகையிலைத் தரகு.

தரகருக்கு வருவாய்க்கு வற்றில்லை. ஆனாலும் அன்றாடச் சம்பாத்தியம் அவருக்கு அன்றைக்கே சரி. முருகேசபிள்ளை நாளையைப் பற்றி இன்றைக்கே கவலைப்படாத பேர்வழி!

குழைக்கடையில்,புதிய குழைகள் வந்த படியும் தரகர் தீர்ந்து விட்டவை தோட்டங்களை நோக்கித் தலைச் சுமையாகச் சென்ற படியும் இருக்கின்றன.

குழை கொண்டு வந்த குடியானவப் பெண்களுக்கும் தரகருக்குமிடையில் பேரம் பேசத் தொடங்கி விட்டது.

“எங்கை... செல்லாச்சி! நீயும் மற்ற அஞ்சுபேரும் சுப்பிரமணிய நயினாரோடை போறியளே?... ரெண்டே கால் போட்டிருக்கு...’

“நம்மாணையாக்கும் கழுத்து அமத்த அமத்தச் சுமந்தந்த நோ மாறயில்லை... நாம்இந்தப்பெரிய கட்டுகளுக்கும் ரெண்டே கால் போடுது...”

“குயில் எண்டால் சூடு தான்... நீங்கள் பாவட்டையைக் கொணடந்திட்டு... உம்உம்... ரெண்டு பணத்தைக்கூட வைச்சு வேண்டுங்கோ ...இந்தா..தூக்கு...”

குழைக்கட்டுகளைச் செல்லாச்சியின் தலையில் எடுத்து விடு கிறார் முருகேச பிள்ளை.

மேலும் புதிய குழைக்கட்டுக்கள் வந்து இறங்குகின்றன. பொன்னியும் அவள் அயல் வீட்டு கூட்டாளிப்பெண்களும் கொண்டு வந்தவற்றைக் கட்டுக்கட்டாகத் தூக்கிப் பார்க்கிறார் தரகர். பெண்கள் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொள்ளுகிறார்கள்.

“ஓ!-பொன்னுவோ? உன்ரை விலைப்பருவங்கள் எப்பிடி?”- தரகரின கேள்வியில் சிலேடை சாயல காட்டுகிறது.

தலைமையிரை அவிழ்த்துச் சிலுப்பி,கோதி முடிந்தபடி பொன்னி தரகரை நிமிர்ந்து பார்க்கிறாள்.

முருகேசபிள்ளையின் முகத்தில் பதற்றம் இழையோடி மறைந்து, இலேசாக மலர்ச்சி விரிகிறது.

“உன்ரை கட்டுக்கு ரெண்டரை போடுகிறன்...மற்றவையின்ரை சிறிசு... ரெண்டேகால் தான சரியே?”

கேள்வியையும் குறைச் சுருட்டையும் சேர்த்து எறிந்துவிட்டு, உடனே வராத பதிலைத் தேடுவதற்காகக் கண்களைச் சட்டென்று பொன்னியின் முகத்தில் வீசுகிறார் தரகர். அப்பொழுதும் பதில் தயங்குகிறது. தரகரின் பார்வை சற்று கீழே நகர்கிறது. பொன்னியின் கருங்காலிச் செதுக்கு குடம்பைக் கவ்விக்கிடக்கும் குறுக்குக் கட்டுக்கு மேலே மொழுமொழுவென்றிருக்கும் வழுக்கு மேனியில் அவர் கண்கள் மேய்கின்றன... அவள் கன்னத்தில், தோளில் , புஜத்தில் , இலையான் உட்கார்ந்தால் கூட நழுவி விழுந்துவிடும்!

“நமக்குத் தெரியும் தானே... மற்றக் கட்டுகளுக்கும் நாயமாப் போடவாக்கும்...” -பொன்னியின் வாய் மட்டுமல்ல. அவளுடைய கண்களும் இந்த வார்த்தைகளைப் பேசுகின்றன.

வெற்றிலைக் காவியேறிய ஈச்சங்கொட்டைப் பற்கள் கெஞ்சுகின்றனவா? கேலி செய்கின்றனவா?

“நம்மைத்தானாக்கும்... என்ரையையும் தீர்த்துவிடன். கறிக் கடைக்கும் போகவேணும்... இருளுது ” எதிர்ப் புறமிருந்து ஒரு குரல் இறைஞ்சுகிறது.

“என்ன துடிக்கிறாய்?... பிள்ளை கிணத்துக் கட்டிலையோ?”

“நமக்கு எப்பவும் பகிடி தான்... மத்தியானமும் சமைக்கேல்லை... அவர் பனை இடுக்கிப்போட்டு வந்து சத்தம் போடப்போறார்... கொஞ்சம் கெதிப்பண்ணிவிட... வெள்ளெனக் கூட இதிலை இருக்கிறன்”

“உம் ...சரி, சரி பொன்னு! மற்றவையின்ரைக்கு இன்னும் ஒரு பணத்தை வைச்சுத் தீர்த்திருக்கு... கொண்டு போங்கோ... இஞ்சாரும் வேலுப்பிள்ளை! காசைக் குடுத்து அதுகளை வெள்ளென அனுப்பிவிடும்”

வேலுப்பிள்ளையைத் தொடர்ந்து பொன்னி முன் நடக்க மற்ற ஐந்து கூட்டாளிப் பெண்களும் தொடர்கிறார்கள்.

“என்ரை மகராசன் கடவுள் போலை ; சுணக்கமில்லாமல் சுறுக்காத் தீர்த்துவிட்டுட்டுது...”

சென்ற இரண்டு மூன்று கிழமைகளாக பொன்னி மீதும்,அவளோடு வருபவர்கள் மீதும், முருகேசபிள்ளைக்கு விசேஷ அக்கறை தான். குழைக்கடையில் அவர்கள் அதிகம் சுணங்குவதில்லை.

பொன்னி சின்னப்பெண்; குழைக் கடைத்தொழிலுக்குப் புதுசு. மேற் சட்டையைக் களைந்து விட்டு, குறுக் குக்கட்டுகட்டத்துவங்கி முழுசாக நாலு மாசங்கூட இன்னும் ஆக வில்லை!

பருவத்தைத்தாண்டி ,நீண்டு வளர்ந்து,“கெட்டு” வெடித்து, பூத்து, மிதந்து நிற்கும் புகையிலைச் செடிகள் வம்சவிருத்திக்கான வித்து விளைப்பதற்குத் தான் பயன்படும். இலைகள் சூம்பியும் விடும்! “குருமன்” பூச்சி பிடித்த புகையிலைச் செடிகளோ. “வெளுறிப்” போய் விடும்; இப்படிப் பட்ட புகையிலைச் செடிகளைக்கூடபதப்படுத்தி உருசி பார்த்த அனுபவங்கள்,இந்த ஏழு வருடத் தரகர் தொழிலில் முருகேச பிள்ளைக்கு ஏராளம்!

இளமையென்ற செழுந்தரையில் காலூன்றி,வாளிப்பாக வளர்ந்து. [illegible] நிற்கும் பொன்னியைக்கண்ட போது, முருகேசபிள்ளைக்கு மதாளித்து வளர்ந்து, முறுக்கேறி,பாணி பிடித்த இலைகளைப் பரப்பிக்கொண்டு திறம் விளைச்சலுக்கு உதாரணமாகத் திகழ்ந்து நிற்கும் புகையிலைச் செடிதான் தோற்றம்காட்டிற்று.

மாலை வெய்யிலின் மஞ்சளை வெற்றுத்தோளில் போர்த்தி நீலச் சேலையை நெஞ்சில் குறுக்கே கட்டி பசுமையான குழைக்கட்டைத் தலையில் ஏந்தி, வெற்றிலைச்சாறு உதட்டைச் சிவப்பாக்க பொன்னி நடந்துவந்த ஒய்யாரத்திற்கு, தரகர் முருகேசபிள்ளையின் தாபமுற்ற நெஞ்சம் தாளம் போடுகறது. பொன்னி குழையை இறக்கு முன்பே, தரகர் குழையத்தொடங்கி விடுகிறார்.

“வலுவான கட்டு...களைச் சிருப்பியே!... இப்பிடிப் பாரத்தைச் சுமக்கிறதோ?...”-அனுதாபம் உதடெல்லாம் வழியதனக்கு இல்லாத உரிமையை வலியவரவழைத்துக் கடிந்து கொள்கிறார்.

இறால் எறிகிறார்!சுறா இன்னும் கவ்வவில்லை!! பொன்னிக்கு வெற்றிலைத்தாகம், குறுக்குக்கட்டின் இடுக்கிலிருந்த கொட்டைப் பெட்டியை, விரலைச் செலுத்தி எடுத்து விரிக்கிறாள். கொழுந்து வெற்றிலை முருகேசபிள்ளையின் கண்களைக் குத்துகிறது; கிறுக்கேற்றுகிறது.

“இஞ்சை பிள்ளை; பொன்னு... வாயெல்லாம் புளிக்குது எனக்கும் எப்பன் வெத்திலை தா...” பொன்னி முருகேசர் கையில் வெற்றிலை வைக்கிறாள்.

“கதையோடைகதை...இண்டைக்கு உன்ரை குழையை நான் தான் எடுக்கப்போறன் பொன்னு தம்பின்ரை தறைக்கு குழைவைக்க வேணுமெண்டவன் உன்ரை நல்லாயிருக்கு... மற்றவையின்ரை போகட்டும். நீ கொஞ்சம் பொறு....”

பன்னைச் சரியாக்கும்; நயினார்...”

பொன்னி கொடுத்த வெற்றிலையையும் வரப்போகிற ஏதோ இன்பத்தின் கற்பனையையும் சேர்த்து, தரகர் ஒரு கணம் அசை போடுகிறார்.

செல்லாச்சி கொஞ்சம் துடுக்குக் காரி.

“என்ன வாக்கும் நாங்கள் வீட்டை போறேல்லையே?”

முருகேசபிள்ளை சமாளித்துக் கொண்டு, தரகில் விரைவு காட்டுகிறார்.

குழைகள் செல்லுகின்றன. புதுக் குழைகள் வருகின்றன;அந்தி சரிந்து கொண்டிருக்கின்றது. பொன்னி இருக்கிறாள்.

குழைக்கடை கலைந்து முருகேசபிள்ளை புறப்பட, பொழுது மைம்மலாகி விட்டது. அரைச்சவுக்கத்தை அவிழ்த்து உடம்பு வியர்வையைத் துடைத்து விட்டு, உதறித் தோளில் போட்டுக்கொண்டு, அவர் முன்னே செல்ல ,பொன்னி குழைக்கட்டோடு பின்னே நடந்தாள். பெருந்தெருவில் இருந்து இறங்கி , வெள்ளவாய்க் காலூடாக நடந்து தோட்டத்துப் பெருவரம்பில் கால் எடுத்து வைக்கும்பொழுது மேற்குப் புறம்பனை வட்டுக்குள்ளிருந்து முருகேசபிள்ளையின் பொட்டல் விழுந்த வழுக்கைத்தலை போல வளர்பிறை தன் [illegible] பார்த்தது. பனை வட்டுக்குள் இரண்டு நுங்குக்காய்கள் தேனிலவில் மின்னுகின்றன.

தோட்டம் வந்துவிட்டது.“ இதிலை இறக்கு” அவள் குழைச்சுமையை சரிந்து இறக்கினாள். “அந்த அவசரத்தில் ... ” அவள் குறுக்குக்கட்டு அவிழ... பனைவட்டு ...தேனிலவில் மின்னும் நுங்குகள்... முருகேசபிள்ளையின் குதிற்காற் குருதி குபீ ரென்று சீறிச் சிரசிலடிக்கிறது.

அவர் உணர்ச்சிகளும் கட்ட விழ...“ சீ!கையை விட....” தோழில் நெளிந்த பாம்பை உதறி எறிகிறாள். தீயைத் தொட்ட கை“சுரீ” ரெண்டு சோர்ந்தது. அடுத்து என்ன என்ற தீர்மானம் தோன்றாத இரண்டு கணங்கள் தீய்ந்து அமுங்குகின்றன.“பொன்னு... பொன்னு... ” கேரலாகக் குரல் கரகரக்கிறது.

“தூ...” நிலவையும் கிழித்துக் கொண்டு பொன்னி என்ற நெருப்புச்சுடர் விர்ரென்று விரைந்து மறைகிறது.

அடுத்த நாள் குழைக்கடையில் தரகர் பொன்னியைத் திரும்பியும் பார்ககவில்லை. பொன்னியின் குழை மைம்மல் வரை காத்திருக்கிறது. மாலையில் வாடிச்சோர்ந்து வீடு செல்கிறது. அன்றிரவு பொன்னி வீட்டில் அடுப்பெரியவில்லை. இரண்டாவது நாள் பொன்னியின் குழைக் கட்டுவருகிறது. போகிறது. வீட்டில் அடுப்புத் தூங்குகிறது. மூன்றாவது நாள் நிலைமை மாறவில்லை. நாலாம் நாள். கூடவந்த நாலு பெண் களுக்கும் பொன்னி நடந்ததைச் சொல்லிவிட்டாள்.

குழைக்கட்டுகளை இறக்கும் பொழுதே அந்த நாலு பெண்களும் பொன்னியுடைய குழைக்கட்டும் தீர்க்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை தரகரிடம் விடுத்தார்கள். முருகேசபிள்ளை முடியாது என்று மூர்த்தண்ணியமாக மறுத்துவிட்டார்!

முடிவு ? ஐந்து குழைக்கட்டுகள் அன்று விலைபோகவில்லை.

விளைவு? ஐந்து குடும்பங்கள் அன்று பட்டினி!

மறுநாள் அந்த ஐந்து குழைக் காரிகளின் கூட்டாளிப்பெண்களுக்கும் விஷயம் தெரிந்துவிட்டது . பலன் ? அத்தனைபேரும் அன்று பட்டினி!

அத்தனைபேருக்கும் விசாரங்கள் வேறு!இரசனைகள் வேறு; உணர்வுகள வேறு; ஆசைகள் வேறு. ஆனால்.. அவர்கள் எல்லோருக்கும் வயிறு ஒன்று; பசி ஒன்று.

பசி ,இயக்கமாகிறது,இயக்க மூலதனமாகிறது; இயக்க சக்தியாகிறது.

குழைக்கடையில் தரகர் காத்திருக்கிறார். கமக்காரர்கள் காத்திருக்கிறார்கள்.குழைக்கட்டுகள் வருகின்றன.அவற்றின் சொந்தக் காரிகள் அவற்றுக்கெதிரில் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள். தரகர் தனித்தனியாக விலை தீர்க்க முயல்கிறார். “ பொன்னியின் குழைக் கட்டை முதலில் விலை தீர்க்க வேணும்” ஒரு பெண் குரல் எழுகிறது. “இல்லாவிட்டால் ஒருத்தரும் விக்க மாட்டோம்”

“நாளேலையிருந்து ஆரும் இந்தச் சந்தைக்குக் குழைகொண்டரமாட்டோம்” பெண் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

குழை வாங்க வந்த சிறு கமக்காரர்கள் தரகர் முருகேசுபிள்ளையின் முகத்தைப்பார்த்தனர். முதல் நாளும் அவர்களுக்குக் குழை கிடைக்காத ஏமாற்றம்.“ முருகே சண்ணை....கோவத்தைப்பாரமல் தீர்த்து விடுங்கோ... பாவம், கொண்டு வந்த குழையை அதுகள் திருப்பிக் கொண்டு போறதே ?... ”

ஒரு கமக்காரர் பாவம் பார்க்கும் தோரணையில் பரிந்துபேசுகிறார்.

தரகர் மௌனியாயிருக்கிறார்.

“உழைப்பாளிகளோடை ஏன் பகைப்பிடிப்பான்? சமாதானமாய்த் தீர்த்து விடுங்கோ” தரகர் தலையசைக்கவில்லை.

“[illegible] அடுத்த சந்தைக்குப்போவம்”

குழைக்கட்டுகளைத் தூக்கிக் கொணடு அந்தப்பெண்கள் புறப்பட்டு விட்டார்கள்.

கமக்காரர்கள் திகைத்து நிற்கிறார்கள். இந்தக் குழைக் கடைக்குக் குழை வராவிட்டால், நாலு கட்டைக்கு அப்பாலிருக்கிற அடுத்த சந்தையிருந்து கொண்டு வரகூலி அதிகமாகும். அதிகமானால் - விளைச்சல் நஷ்டமானால்... வயிறு? பசி;

“தரகர் கிடக்கிறார். குழைக்காரிகளைக் கூப்பிடுங்கோ...” ஓர் இளங் கமக்காரன் முதல் குரல் எடுக்கிறான். வேறு !குரல்களும் சாதகமாக ஒலிக்கின்றன.

“பொன்னி !சொல்லாச்சி! வாருங்கோ! எல்லாரும் திரும்பி வாருங்கோ” நாட்டாண்மைத்தரகர் நாவடங்கி நிற்கிறார். அத்தனை கமக்கரர் . அவர்களுக்கு உணர்வுகள் வேறு. இரசனைகள் வேறு; ஆனால் வயிறு ஒன்று; பசி ஒன்று. பசி வந்து விடுமே என்ற பயத்தில் கட்டுண்டு அவர்கள் சேர்ந்து நிற்கிறார்கள்.

அநதப்பயத்துக்குப் பயந்து, நாட்டாண்மைத் தரகர் நாடியொடுங்கி நிற்கிறார். ★

**ஈழத்துச் சோமு**



“ஈழத்துச்சோமு” என்ற புனை பெயரில் இலக்கிய உலகில் தடம் பதித்தவர்தான் நா.சோமகாந்தன்.இவா பல கதை கட்டுரைப் புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவ்வாரம் இவரின் “நிலவோ நெருப்போ?” என்ற கதையை வெளியிடுகிறோம்.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

30

முதலாம் பகுதி

## தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

### ஊழியம்

தேசத்திலுள்ள மக்கள் வரிகளைச் செலுத்துவதோடு, ஊதியம் பெறாது ஊழியம் என்ற சேவையினை அரசாங்கத்திற்கு செய்யவேண்டும். ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு நாள் என்ற அடிப்படையில் வருஷம் ஒன்றிலே 12 நாட்களுக்குச் சேவை புரிதல் வேண்டும். கோட்டைகள், வாடி வீடுகள் ,பொதுக்கட்டடங்கள் முதலியவற்றை அமைத்தல் , கல்லுடைத்தல், தானிய களஞ்சியங்களை அமைத்தல்,தெருக்கள், பாதைகள் போன்றவற்றை அமைத்தல், குளம், கால்வாய் போன்றவற்றின் வரம்புகளைச் சீரமைத்தல், நிர்வாகக் கடமைகளைச் செய்கின்ற அரசாங்கவதிகாரிகள் பிரயாணம் பண்ணும் போது இரவிலே விளக்குப்பிடித்தல், பொருள்களை ஏற்றிச் செல்ல மாடுகளையும் வண்டிகளையும் கொடுத்தல் போன்றன ஊழியக்காரரின் கடமைகளாகும்.

உலாந்தாக்காரரின் ஆவணங்களில் ஊழியம் பற்றி மேல்வரும் குறிப்புகள் உள்ளன.

"வெள்ளாளர், மடப்பள்ளி என்னும் சாதியாரில் ஒவ்வொருவனும் தேசத்துப் புரவலனுக்கு மாதம் ஒரு நாளைக்குச் சேவை புரிய வேண்டும். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுகள் ஆகிய பற்றுகளிலிருந்து நாள்தோறும் 500பேர் வேலை செய்ய வருகின்றனர். அவர்களில் 120 பேர் ஹம்மென்ஹீல் கோட்டைக்கு அண்மையிலே ஊறாத்துறையிலுள்ள தென்னந்தோட்டத்திலும், அம்ஸ்ரர்டாம் தீவிலே அமைக்கப்படவுள்ள மாளிகைக்குத் தேவையான கல்லு, சுண்ணாம்பு ஆகியவற்றைச் சேகரிக்கும் தொழிலிலும் வேலை செய்கின்றனர். 150 பேர் பருத்தித்துறையிலே கடலோரமாக அமைக்கப்படும் இராணுவ தளத்திலே பணிபுரிகின்றனர். எஞ்சியுள்ள 230 பேரும் இங்கு வெடிமருந்துச் சாலைக்கு வேண்டிய புதிய கட்டடத்தைக் கட்டுதல், தென்ம்பிள்ளைகளை உண்டு பண்ணுதல், கொம்பஞ்ஞீயவின் பூந்தோட்டங்களுக்கு நீர் இறைந்தல், இங்கும் கொழும்பிலும் உள்ள கோட்டைகளைத் திருத்துவதற்கு வேண்டிய கற்கள், சுண்ணாம்பு, ஆகியவற்றைச் சேகரித்தல் போன்ற சேவைகளில் ஈடுபடுகின்றனர். ஊர்களில் உள்ள தச்சரும் கம்மாளரும் மாதத்தில் ஒரு நாளைக்கு இங்கு வருகிறார்கள். அவர்களிற் 15 பேர் தினமும் வருகிறார்கள்..."

"கோட்டைகளிலே பாவனைக்குத் தேவையான எல்லாப் பானைகளையும் குசவர்கள் இலவசமாகக் கொடுக்கவேண்டும். அத்துடன், இப்போது புதிதாக அமைக்கப்படும் வெடிமருந்துச் சாலைக் கட்டடத்திற்குப் போல மேலதிகமான வேலைகளுக்குத் தேவைப்படுமிடத்துச் செங்கற்களை வழங்க வேண்டும். ஓடுகளை அவர்கள் வழங்குமிடத்து அவர்களுக்கு ஆயிரத்துக்கு 3பணம் வீதமாகவும், அத்திபாரங்களுக்குத் தேவையான செங்கட்டிகளுக்கு ஆயிரத்துக்கு 2 பணம் வீதமாகவும் காசு கொடுக்கப்படும். கம்மாளர் பட்டறைகளுக்குத் தேவையான கரியினை நாள் தோறும் ஊர்களிலிருந்து கொண்டு வருவார்கள். பச்சிலைப்பள்ளியில் உள்ளவர்கள் பட்டணத்திற்கு வந்து கூலி வேலை செய்யும் வழக்கமில்லை. ஆனால், அவர்கள் அதற்குப் பதிலாக மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 பாய்களையும் நாளொன்றிற்கு மண், சுண்ணாம்பு போன்றவற்றைச் சுமந்து செல்வதற்கு வேண்டிய கடகங்களையும் கொடுக்கவேண்டும்..."

"கடல் வழியாகவும் ஆற்று வழியாகவும் நடைபெறும் வேலைகளைக் கரையார், பள்ளுவிலிகள் போன்ற கடற்றொழில் புரிவோர் செய்தல் வேண்டும். கடல்வழியான தொழில் புரியும் சோனகரிடமிருந்தும் இவ்வாறான சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்..."

"வெள்ளாளர், பரதேசி, மலையாளர், அகம் படி,தனக்காறர், சான்றார் இந்த விதப்பட்ட சாதிகள் ஒவ்வொரு மாதத்தைக் கொரு நாட் கோட்டையிலே வந்து ஊழியஞ் செய்யக் கடனாயிருக்கிறார்கள். இதில் குறைபாடு வந்தால் ஒவ்வொரு நாளைக்கு ஒன்றரைப் பணஞ் சிக்கிறுப்பார்கள் என்கிறதறியவும்"

### வளங்களும் வாழ்க்கை முறைகளும்

யாழ்ப்பாண இராச்சியத்தில் உள்ள வருமானங்கள் பணமாகவே அரசினருக்குக் கிடைத்தன என்பதை இங்கு முன்பு கவனித்தோம். அந்த வருமானங்களில் பெரும் பகுதி நிலவரியாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதற்குச் சமீபமான தீவுப் பற்றிலும் எதுவிதமான ஆறுகளோ நீர்ப்பாசனஞ் செய்யக்கூடிய குளங்களோ இல்லாதபோதும் விவசாயம் முன்னேற்றம் அடைந்திருந்தது. அங்கு அந் நாட்களில் வாழ்ந்த மக்களின் கடின உழைப்பும், நெடுங்கால அனுபவத்தின் அடிப்டையில் அவர்கள் விருத்தி செய்திருந்த பயிச்செய்கை முறையும் விவசாயத் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகளுக்கு ஏதுவாய் இருந்தன.

பயிர்ச்செய்கைக்குரிய நிலங்களை நெற்காணி, வரகுக் காணி என இருவகையாகப் பாகுபடுத்தும் முறை காணப்பட்டது. நெற் பயிர்ச்செய்கைக்குரிய காணிகளே நெற் காணி எனப்டும். நெல் வயல்களில் வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே செய்கை பண்ணமுடியும். மழை வீழ்ச்சி காணப்படும் ஆவணி முதல் மாசி வரையான மாதங்கள் நெற் பயிர்ச் செய்கைக்குரிய காலமாகும்.

மட்டக்களப்பிற் போல அதிகமான பல வினங்களைச் சேர்ந்த நெல் செய்கை பண்ணப்பட்டதாகத் தெரியவில்லை. வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய பள்ளமான வயல்களில் ஆறு மாத கால நெற் பயிர்களைச் செய்கை பண்ணினார்கள். கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டும் வெள்ளம் நிற்கும் வயல்களில் மூன்று மாத காலத்திற்குரிய பயிர்களைச் செய்கை பண்ணினார்கள். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இந்த முறை காணப்பட்டது.

வயல் நிலங்களைப் பொறுத்தவரையிற் குடியானவர்கள் இரண்டு முக்கியமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருந்தது. அவற்றிலொன்று போதிய அளவிலே வயல் நிலங்களும் தோட்டக்காணிகளும் இல்லாதமையாகும். மேலும், வழமைப்படி பெற்றோரின் காணிகள் அவர்களின் பின் பிள்ளைகளிடையே பங்கீடு செய்யப்பட்டமையால் நிலங்கள் சிறு பங்குகளாகப் பிரிக்கப்பட்டன. பயிர்ச்செய்கை பருவ மழையிலே தங்கியிருந்தமையால் வரம்புகளைக் காணிகளிலே கிரமமாக அமைத்து நீரினை இயன்றவரையிலே வயல்களிற் தேக்கிக் கொள்ளும் முறையைக் கடைப்பிடித்தார்கள். முன்னாட்களிலே பங்குனி மாதம் வரை வயல்கள் சேறாயும் ஈரமாயும் இருக்கும்.

(தொடரும்)

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்
கவிதைப் போட்டி -2004
1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
"தமிழா உனக்கேன் இக்கதி"

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த
கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்
அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்........................
........................
தபால் முகவரி........................
........................
பிறந்த திகதி........................
தே.அ.அ. இல ........................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..........................
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.................. ..........................
திகதி போட்டியாளர்கையொப்பம்

# இனப்பிரச்சினையைத் தீர்க்க எவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை

## ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சாடுகிறார் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அதாவுல்லா

(கொழும்பு)

**தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணபதில் எந்தவொரு அரசியல் கட்சியும் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை. ஏன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் கூட இவ் விடயத்தில் அக்கறையுடன் செயற்படவில்லை.**

**மாறாக, ஆட்சியைத்தக்க வைத்துக்கொள்ளவும், அதிகாரத்தை தம்வசமாக்கிக் கொள்ளவும், பதவிகளை கட்டிப்பிடித்துக்கொள்ளவும தமிமீழ விடுதலைப்புலிகளைத் திருபதிப்படுத்தவுமே இவ்கள் முயன்று வருகின்றார்கள் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லா குற்றம்சாட்டியுள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப் பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அதாவுல்லா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகண்டு, அனைத்து இன மக்களும், நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என்ற சிந்தனை எந்தவொரு அரசியல்வாதிக்கும் இல்லை.

இதன் காரணமாகவே சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாதிருக்கின்றது.

இவ்விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைப் பாராட்ட வேண்டும். எனெனில் அவர் மக்களின் நலன் கருதியே இன்றுவரை செயற்பட்டு வருகின்றார். பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து பல தியாகங்களைச் செய்து போர்க்களத்தில் இறங்கி பல சாதனைகளைப் படைத்தவர் அவா.

அரசியல்வாதிகளைப் போல சுகத்தை அனுபவித்துக்கொண்டு பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றவில்லை. இதனாலேயே அவரைத் தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள். நேசிக்கின்றார்கள்.

அது மட்டுமன்றி மக்களுக்காகப் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்பட்டு வருகின்றவர் தலைவர் பிரபாகரன்.

எனவே அரசியல் வாதிகள் இனியாவது மக்களின் நலன் கருதி மக்களுக்காகச் செயற்படவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இனபபிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கையில் அரசியல் யாப்பு தடையாக இருந்தால் அதில் சில திருத்தஙகளை மேற்கொள்ள வேணடும். ஆனால், அவ்விடயம்பற்றி எந்தவொரு கட்சியும் பிரதமருக்கோ, ஜனாதிபதிக்கோ எடுத்துக் கூறவில்லை. பேச்சளவில் மட்டும் ஏதோ கூறிவருகின்றார்கள். அவ்வளவுதான்.

இதற்கிடையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும்-ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் பற்றியும் சில தமிழ் கட்சிகள் விமர்சித்து வருகின்றனர். அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கூட்டுச் சேர்ந்திருந்தாலும் கூட, இனப் பிரச்சினை விவகாரத்தில் கவனம் செலுத்தி இருக்கின்றார்கள் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

புலிகளுடன் பேசக்கூடாது, தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்க்க் கூடாது, யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும். எனக் கூறி வந்தவர்கள் இன்று புலிகளுடன் பேசி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் எனக் கூறி வருகின்றார்கள்.

எனவே, தமிழ் கட்சிகளும் சரி முஸ்லிம் கட்சிகளும் சரி, மலையகக் கட்சிகளும் சரி ஜே.வி.பியை விமர்சித்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு அக்கட்சிக்கு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி அக் கட்சியுடன் அது பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.

இது இவ்வாறிருக்க, வடக்கில் முஸ்லிம்களை மீளக் குடியமருமாறும், கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு நேர்ந்த துன்பங்களை இட்டுத் தாம் வருத்தமடைவதுடன் அதற்கு மன்னிப்புக் கோருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறி வருகின்றனர்.

ஒரு தாய்வயிற்றுப்பிள்ளைகள் தான் முஸ்லிம் தமிழ்ச் சமூகங்கள். எனவே, கடந்த காலங்களில் நிகழ்ந்த கசப்புணர்வான சம்பவங்களை மறப்போம். மன்னிப்போம். சகோதரங்கள் அடிபடுவதும் முரண்படுவதும் வழமை. பின்னர் அவர்கள் ஒற்றுமையுடனும் அன்புடனும் பழகுவதும் உண்மைதான்.

ஆனால் அவர்களிடையே மீண்டும் முரணபாடுகளை சண்டைகளை தோற்றுவிக்காதிருக்கச் செய்யவது தமிழ் முஸ்லிம் கட்சிகளின் கடமை.

எமது மக்கள் இவர்களின் அழைப்பை ஏற்று வடக்கில் மீளக் குடியமர்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், அங்கு மீண்டும் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே சண்டை ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? அவ்வாறு அவர்களிடையே மீண்டும் சண்டை ஏற்பட்டால் அது இனக்கலவரமாக மாறிவிடும் சாத்தியமும் இங்கு இருக்கிறது.

எனவே நாங்கள் இது விடயத்தில் மிக அவதானமாக செயற்படவேண்டம்.

அதற்காகவே அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்ளவேண்டும். அப் பேசசுவார்த்தையில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பிற்கும் எடுத்துக் கூறவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரி வருகினறது.

அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் முஸ்லிம்களை நாம் எவ்வாறு வடக்கில் மீளக்குடியமர்த்த முடியும்?

இது ஒருபுறமிருக்க தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டும் என ஒற்றைக் காலில் நிற்கின்றார்கள்.

உணமையிலேயே எந்த நாட்டிலும் சரி யுத்தம் நடைபெற்று பின் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வருகின்ற போது அந்தத் தீர்வை அமுல்படுத்துவதற்கான மார்க்கத்தில் ஒன்றுதான் இடைக்கால நிர்வாகசபை.

ஆனால் எமது நாட்டில் நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தையில் தீர்வு எதுவும் வராத சூழ்நிலையில் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது என்பது மிகவும் தவறான செயலாகும்.

இருந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிககையை மறுக்க முடியாதநிலை அரசிற்கு ஏற்பட்டால் வடக்கு கிழக்கு இணைந்த மாநிலத் தீர்வைக் கொடுக்கக்கூடாது.

ஏனெனில், வடக்கும்-கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு இருக்கின்றது. சரி அவ்வாறு அரசு புலிகளுக்கு இடைக்கால நிர்வாகசபையைக கொடுபபதானாலும் வடக்குக்கு வேறாகவும் கிழக்குக்கு வேறாகவும் கொடுக்க வேண்டும். அதுவும் இல்லாத விடத்து வடக்கிலும், கிழக்கிலும உள்ள சகல பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கியதான தனியான இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டும்.

இதற்கிடையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தை இணைத்து இடைக்கால நிர்வாகசபையை வழங்குவதற்கு சிங்கள மக்கள் இணங்குவார்களா? என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அவர்கள்தான் வடக்கு-கிழக்கு மாகாணத்தை இணைத்தவர்கள். அத்துடன் கிழக்கில் சிங்களவர்களும் வாழுகின்றனர். எனவே, சிங்கள மக்களின் அனுமதியையும் பெறவேண்டும்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரனிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீமுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம செல்லுபடியற்றதாகி விடடதாக பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தது.

உண்மையிலேயே அது ஒப்பந்தம் அல்ல. பிரபாகரனும் ஹக்கீமும் இணைநது ஓ் கூட்டு அறிக்கை ஒன்றையே வெளியிட்டிருந்தனர். இந்நிகழ்வில் நானும் கலந்துகொண்டிருந்தேன்.

எனவே, சில ஊடகங்களே தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்த முயலுகின்றன. எது எவ்வாறாயினும் தமிழ் சமூகமும் எமது சகோதர இனமே. அவர்களுடன் நாம் ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றோம். அதனால் நாம் ஊடகங்களின் செய்தியைக்கண்டு அஞ்சவில்லை என்றார். (உ-60,10)

## பலாலி ஆசிரிய கலாசாலை நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம)

நாளை சனிக்கிழமை பலாலி ஆசிரிய கலாசாலை நடைபெறும் தினமாகத் தீர்மானிக்கப்படடிருப்பதனால், அனைத்து விரிவுரையாளர்களையும், கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரிய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (உ)

# இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் உடனடியாக இறுதியாக்குதல் வேண்டும்

## தேசிய தேசப்பற்று இயக்கம் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

இரு நாடுகளுக்கும் இடையில் பரந்த மட்டில் பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பெறுவதற்கேற்றவாறு இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கையை உடனடியாக இறுதியாக்குதல் வேண்டும் என்று தேசிய தேசப்பற்று இயக்கம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

இவ் இயக்கத்தலைவர் வண. எல்லே குணவன்ச தேரா கருத்துத் தெரிவிக்கையில் தறபோதைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கு இந்தியாவின் பங்களிபபு முக்கியம். இந்தியா எம்முடன் கலாசார உறவுகளை வைத்திருக்கும் அயல் நாடு. இப் பாதுகாப்பு உடன்படிக்கையில் அடங்கியுள்ளவை பற்றி எமக்கு எதுவும் தெரியாது. ஆனால் இவ் உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதில் ஆவலாகவுள்ளோம்.

அத்துருகிரிய இரகசிய புலனாய்வு இல்லம் தொடர்பாக வழங்கப்பட்ட தண்டனை விடயத்தில் எமக்கு திருப்தி கிடையாது.

ஜனாதிபதியின் நடவடிக்கையை நாம் போற்றுகிறோம். சந்தேகத்திற்கு இடமானவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இராணுவம், பொலிஸ் தவிர்ந்த இத்துரோகச் செயலுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், மாகாண சபைகளில் பொதுமக்களின் நிதி வீணாக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். இது நாட்டிற்கு நன்மைகளைவிட தீமைகளையே அதிகம் செயது வருகிறது. மாகாணசபை முறைகள் வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டன. ஆயினும் அவற்றினால் வடக்கு மக்களோ, தெற்கு மககளோ நன்மை அடைய வில்லை எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, அத்துருகிரிய ஆயுதக் களஞ்சிய' விவகாரத்தின் விளைவாக புலிகளால் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பஙகளுக்கு நட்டஈடுகளை வழங்க வேண்டும் என தேசிய தேசப்பற்று இயக்கத்தின் அமைபபாளரான விமல் வீரவன்ச பாதுகாப்பு அமைச்சைக் கேட்டிருந்தா்.


அத்துடன் பொதுத் தேர்தல் ஒன்றையும் நடத்துமாறு ஜனாதிபதியை தேசப்பற்று முன்னணி சார்பில் அவர் வேண்டுகோள்விடுத்தார்.

மாதாந்த சஞ்சிகையையும், இணையத்தளம் ஒன்றையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி முதன முதலாக மகரகம இளைஞர் சங்கத்தில் தேசப்பற்று முன்னணி ஆரம்பிக்கவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-6)

# சர்வதேச உதவிகள் இல்லையேல்
# பலஸ்தீன இராஜ்ஜியம் சரிந்துவிடும்
## ஐ.நா. பொதுச் செயலர் கவலை

(நியூயோர்க்)

பலஸ்தீன மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க சர்வதேச உதவிகள் கிடைக்காவிட்டால் பலஸ்தீன இராஜ்ஜியம் சரிந்துவிடுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அச்சம் வெளியிட்டுள்ளார்.




அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் பிறேன்றோமனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே கோபி அனான் இவ்வாறு கூறியுள்ளார்.

இது விடயம் குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பலஸ்தீனர்கள் எதிர்நோக்கும் பொருளாதார, சமூக, மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்துத் தாம் பெரிதும் கவலையடைந்துள்ளதாகவும் கூறினார்.மத்திய கிழக்கின் தற்போதைய நிலமைகளும், 4நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதானத்திட்டமும் தேக்க நிலையில் இருப்பதும் மிகுந்த கவலையளிப்பதாக அன்னான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இநத சமாதானத் திட்டத்தை மீண்டும் எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும், சம்பந்தப்பட்ட நாடுகளை பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவது இன்றய முக்கிய தேவையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து-2)



சூடான் நாட்டின் எல்லையில் குறிப்பிட்ட இடங்களைத தவிர மற்றப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நிறுததியுள்ளது அந்நாட்டு அரசு. இதைத தொடர்ந்து அங்கு துப்பாக்கிச சததம் ஓய்ந்து, அமைதி திரும்பி வருவதையடுதது எல்லைப்பகுதியில் உள்ள மணலில் விளையாடும் ஒரு குழந்தை.

### பெப்ரவரி 20இல் நடைபெறவுள்ள ஈரானின்
# நாடாளுமன்றத் தேர்தலைப்
# பகிஷ்கரிக்க கோரிக்கை

(தெஹாரான்)

ஈரானில் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி ஜனநாயகத்துக்கு ஆதரவான மாணவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.

ஈரான் நாடாளுமன்றத்தில் தற்போது பதவிவகிக்கும் உறுப்பினர்களில் 80 சத வீதமானவர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடக்கூடாது என ஈரானிய மதகுருமார்கள் தடை விதித்ததை அடுத்து அந்நாட்டில் நெருக்கடிகள் தோன்றியிருக்கின்றது.

மதகுருமார்களின் நடவடிக்கையை ஈரானிய ஜனாதிபதி கடாமி எதிர்த்துவருவதுடன் துணை ஜனாதிபதியும் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும், மத குருமார்களின் தலையீட்டை எதிர்த்து தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருக்கின்றார்கள்.

இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படாவிட்டால் நாட்டில் வன் முறைகள் வெடிக்கக்கூடுமென ஈரானிய ஜனாதிபதி கடாமி எச்சரிக்கையினையும் விடுததுள்ளார்.

இதனையடுத்து, ஈரானிய மதத் தலைவரான அயத்துல்லா அல் - கோமேனிக் இந்த சர்ச்சையில் தலையிட்டதையடுத்து தடைவிதிக்கப்பட்ட 80 சதவீதமானவர்களில் ஒரு பகுதியினரை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மதகுருமார்களின் சபை அங்கிகாரம் வழங்கியிருக்கின்றது. எனினும் ஈரானின் மதகுருமார்களின் தலையீட்டினால் தேர்தல்கள் நியாயமாக நடைபெறாதென்ற அடிப்டையிலேயே மாணவர்கள் இத்தேர்தலினை பகிஷ்கரிக்குமாறு கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (து-9)



குடியரசு தின அணிவகுப்பு கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பாரம்பரிய, கலாச்சார நடன கலைஞர்கள் புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயைச் சந்திததனர். பின்னர் பிரதமருடன் அவர்கள் எடுததுக் கொண்ட புகைப்படம் .

WORLD NEWS உலக தரிசனம்

# மியன்மாரில் தீ விபத்து 20 பேர் உயிரிழந்தனர்
### 96 வர்த்தக நிலையங்கள் சாம்பலாகின

(ரங்கூன்)

மியன்மாரின் உல்லாசப் பயணத் துறைப்பகுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்ததுடன் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

மியன்மாரின் தலை நகரான ரங்கூனில் இருந்து 120 மைல் தொலைவில் இருக்கின்ற கியாங்டியேபாயா என்ற நகரில் வர்த்தக நிலையங்களும் தற்காலிக கொட்டகைகளும் நெிசலாக அமைந்துள்ள பகுதியிலேயே தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட இந்தத் தீ சுமார் 4 மணி நேரம் நீடித்ததாகவும் 96 வர்த்தக நிலையங்களும் 20 தற் காலிக கடைகளும் எரிந்து சாம்பலாகியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் இவ்வாறான தீ விபத்தொன்று இடம் பெற்றிருப்பது இதுவே முதல் தடவை என மியனமாரின் உல்லாசப் பயணத துறை முகவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (து-9)

# மதச்சின்னங்களின் பாவனைச் சர்ச்சை பிரான்ஸில் வலுக்கிறது

(பாரிஸ்)

அரச பாடசாலைகளில் மதச்சின்னங்கள் அணிவதைத் தடை செய்யும் சட்டத்துக்கு பிரான்ஸ் அமைச்சரவை ஓப்புதல் வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்துக்கு பிரான்ஸ் ஜனாதிபதி ஜெக்ஷெராக் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்.

இதன மூலம் பெரிய சிலுவைகள், யூதர்கள் அணியும் வட்டத் தொப்பிகள், சீக்கியர்கள் அணியும் தலைப்பாகைகள் போன்றன அரசபாடசாலைகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

பிரான்ஸ் அரசின் இந்த நடவடிக்கை அந்த நாட்டில் வாழும் 50 இலட்சம் இஸ்லாமியர்களின் மத மற்றும் மனித உரிமைகளை மீறும் செயல் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சட்டத்தின் பரிந்துரைகள் தெளிவற்றதாகவும் மக்களின் கவனத்தை திசைதிருப்புவதாகவும் இருப்பதாக பிரான்ஸ் எதிர்க்கட்சியான சோசலிசக் கட்சிகூறியுள்ளது. (து-9)

# விஞ்ஞானி டேவிற்ஹெலியின் மரணம் தற்கொலையே
## விசாரணை நீதிபதி அறிக்கை

(லண்டன்)

பிரிட்டிஷ் அணுவாயுத விஞ்ஞானி டேவிற்ஹெலியின் மரணத்தில் 3 ஆம் தரப்பினருக்கு எவ்வித தொடர்பும் இல்லையென அவரது மரணம் தொடர்பாக விசாரணைகளை நடத்திய சிரேஷ்ட நீதிபதி ஹூட்டன் பிரபுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹூட்டன் பிரபுவினால் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கடந்த 26ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில்,

அணுவாயுத விஞ்ஞானி டேவிற்ஹெலி தனது உயிரைத் தானாகவே மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு தற்கொலைச் சம்பவமே என்றும், இந்தச் சம்பவத்துடன் 3 ஆம் தரப்பினர் எவருக்கும் தொடர்பு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், பாதுகாப்புச் செயலர் ஜெக்கூன், முன்னாள் அரச ஊடகத் தலைவர் அலெக்ஸ் டெஜா ஹெம்பல் ஆகியோர் மீது டேவிற்ஹெலியின் மரணம் தொடர்பாக முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இக்குற்றச் சாட்டிற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை, இனிமேலும் அதற்கான ஆதாரங்கள் நீரூபிக்கப்படும் என்பதும் சந்தேகமே என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை கடந்த 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அதற்கு முன்னரே அறிக்கையின் ஒரு பகுதி பிரிட்டிஷ் பத்திரிகையென்றில் வெளியாகிவிட்டது. இது எவ்வாறு வெளியாகியது என்று எதிர்க்கட்சியான கன்ஷவேட்டில் கட்சியின் தலைவர் மைக்கல் ஹவார்ட் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன் இது விடயம் குறித்து உடனடி விசாரணைகள் நடத்தப்படவேண்டுமெனவும் நிர்ப்பந்தித்துள்ளார். (து-9)

### பி.பி.ஸியின் ஆளுநர்சபைத்தலைவர் இராஜினாமா

பி.பி.ஸி செய்திச்சேவையின் ஆளுநர் சபையின் தலைவர் ஹவின்டேவிஸ் தனது பதவியை நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்துள்ளார்.

ஈராக்கின் அணுவாயுதத் திட்டம் தொடர்பாக பிரிட்டிஷ் அரசாஙகம் தயாரித்த ஆவணம் மிகைப்படுத்தப்பட்டு பி.பி.ஸி வானொலியில் வெளியிடப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என நீதிபதி ஹீட்டன் பிரபு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், பி.பி.ஸியின் செய்தியாளர் அன்ரூஹிலிகன், நிர்வாகத்தினர், ஆளும்சபையினர் ஆகியோரை நீதிபதி ஹூட்டன் கடுமையாக விமர்சித்திருந் தார்.

இதனை அடுத்தே பி.பி.ஸி ஆளுநர் சபைத்தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

(து-9)

## இன்று ஒரு தகவல்

# புத்தாண்டு நினைவுகள்

ஒரு பத்திரிகை நிருபர் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி வாங்குவதற்காக ஒரு பெரிய மனிதரிடம் சென்றார். விடயத்தைக் கூறினார். "சிறிது நேரம் அமருங்கள். இதோ தருகின்றேன்" என்று கூறி உள்ளே எழுந்துபோனார். கொஞ்ச நேரத்தில் ஒரு பேப்பருடன் வெளியே வந்தார். இது தான் எனது புத்தாண்டுச் செய்தி என்று கூறி அதை இவரிடம் கொடுத்தார். இவரும் மிக்க நன்றி சார்" என்று வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்.

வரும் வழியில் அதைப் பிரித்துப் பார்த்தார். அப்போது தான் ஒரு விடயம் புரிந்தது இவருக்கு. அதாவது அவர் போன வருடம் கொடுத்த அதே செய்தியை இப்போதும் கொடுத்திருக்கின்றார். அதில் நிறையப் பிரதிகள் எடுத்து வைத்திருப்பார் போலிருக்கிறது. ஏன் சார்? வருஷம் புதிதாகப் பிறக்கின்றது. அது போல் கருத்தும் புதிதாகப் பிறக்கக் கூடாதா? அவர்களும் வேறு என்ன தான் கூறுவார்கள்? "போன வருஷ கஷ்டமெல்லாம் போன வருஷத்துடன் போகட்டும். பிறந்திருக்கும் புதுவருஷம் மக்களுக்கு எல்லா நலன்களையும் வழங்கட்டும் என்று கூறுவதே வழக்கமாகி விட்டது.

இந்த வருஷக் கடைசியிலும் "இந்த வருஷ கஷ்டமெல்லாம் இந்த வருஷத்தோடு போகட்டும் இனி புதிதாகப் பிறக்கும் வருஷம் எல்லா நலன்களையும் வழங்கட்டும்" என்று தான் கூறுவார்கள்.

கஷ்டம் என்பது வருஷம் நமக்குக் கொடுப்பதில்லை சார். நமக்கு நாமே உண்டாக்கிக் கொள்வது அதற்கு வருஷத்தைக் குறை கூறி என்ன பயம்? உலகில் ஆசைகள் தான் துன்பத் திற்குக் காரணம் என்பதை எத்தனையோ அறிஞர்கள் எத்தனையோ முறை கூறி வைத்திருக்கின்றனர்.ஸ்ரீராமகிருஷ்ணரும் ஒரு கதை மூலமாக இதைக் கூறிவைத்தார்.

ஒரு நாடோடி களைத்துப் போய் ஒரு மரத்தின் கீழ் உட்காரந்தான். காற்று சுகமாக வீசியது. " ஆகா இப்போது ஒரு நல்ல படுக்கை இருந்தால் எவ்வளவு சுகமாகத் தூங்குவேன்" என்று நினைத்தான். அப்படி நினைத்து முடிப்பதற்குள் ஒரு ஆச்சரியம் அழகான பஞ்சனை ஒன்று பக்கத்தில் இருந்தது. இது எப்படி நடந்தது? அவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந் திருந்தானே அது ஒரு கற்பகமரம். கேட்பதையெல்லாம் கொடுக்கும். நினைப்பதை எல்லாம் கொடுக்கும். கற்பக மரத்தடியில் உட்கார்ந்திருப்பது அவனுக்குத் தெரியாது.

பஞ்சனை எப்படி வந்தது பக்கத்தில் என்று அவன் அதிகமாக யோசிக்கவில்லை. உடனே அதில் படுத்துவிட்டான். சுகமாக இருந்தது சிறிது நேரம் ஆனது "உடலெல்லாம் வலிக்கின்றதே கால் கையை இரண்டு பேர் பிடித்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று நினைத்தான். அப்படி நினைத்துக்கொண்டிருக்கும் போதே இரண்டு பேர் கையையும் காலையும் பிடித்துவிட்டனர்.

வயிறு பசிக்க ஆரம்பித்தது. அறு சுவை உணவு கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தான். அடுதத விநாடியே அவ்வளவும் ரெடி சும்மா விடுவானா? பக்குவமாகச் சாப்பிட்டு முடித்து மீண்டும் படுத்துவிட்டான்.

நினைப்பதெல்லாம் உடனே நடந்து கொண்டிருப்பதை நினைக்கும்போது அவனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இனிமேல் அவனுக்கு வேண்டியது ஒன்றுமில்லை. அந்தளவுக்கு வந்துவிட்டான். மனம் முழுவதும் சுகமாக இருந்த போது திடீரென்று ஒரு பயம் உருவானது. "இப்போது இங்கே ஒரு புலி வந்துவிட்டால் என்ன செய்வது" என்று யோசித்தான் கற்பகமரம் நினைப்பதையெல்லாம் கொடுப்பதாயிற்றே திடீரென்று ஒரு புலி அவன் முன்பாக வந்து நின்றது. இவன் ஆவென்று கத்துவதற்குள் மேலே பாய்ந்து அடித்து விட்டது.

இப்படித்தான் சார்! நினைப்புத்தான் பிழைப்பைக கொடுக்கும். அதனால் நாம் புதுவருஷம் கொடுக்க வேண்டுமென நினைப் பது சரியல்ல. வருஷம் தான் நமக்குக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றோம். இந்த வருஷத்தில் நான் இப்படி நடந்து கொள்வேன் என்று நாம் தான் வருஷத்திற்கு வாக்குறுதி கொடுக்கவேண்டும்.

புதுவருஷம் பிறக்கும் போது மனிதன் எப்படி இருக்கின்றான் என்று பார்த்து விட்டுவரலாம் என்று கடவுள் பூமிக்கு வந்தார். ஒரு ஆசாமியைக் கூட்பிட்டுப் பேசிப்பார்த்தார். "வருஷம் பிறந்திருக்கிறது உனக்கு ஏதாவது வேண்டுமானால் கேள் தருகின்றேன்" என்றார்.

அவன் கொஞ்சம் கெட்டிக்காரன். கடவுளிடம் போடடுக் காட்டலாம் என்று நினைத்து விட்டான் ."சாமி... உங் கள் தேவ லோகத்தில் ஒரு ரூபா என்பது இங்கு ஒரு கோடி ரூபாவற்குச் சமன் அங்கு ஒருநாள் என்பது இங்கு ஆயிரம வருஷம் என்று கோயிலில் ஒருவர் பிரசங்கம் செய்தார். அது உண்மையா?" என்ற கேட்டான். "உண்மை தான்!" என்றார் கடவுள். "அப்படி என்றால் எனக்கு அதிகமாக ஒன்றும் வேணடாம் உங்கள் கணக்குப்படி ஒரே ஒரு ரூபா கொடுங்கள் அது போதும் என்றான்.

கடவுள் யோசித்தார்...! ஒரு ரூபா கொடுப்பது ஒன்றும் எனக்குக் கஷ்டமில்லை ஆனால் இங்கே வரும் போது எடுத்துக் கொண்டுவர மறந்து விட்டேன். என் கணக்குப் படியே ஒரேயொருநாள் பொறுத்துக்ொள்ளுங்கள் நாளைக்கு வந்து தருகின்றேன்" என்று கூறிவிட்டுப் புறப் பட்டுப் போய் விட்டார்.

ஏன் சார்...! வருஷப்பிறப்பும் அதுவுமாக வாழ்த்தி விட்டுப் போகலாம் என்று வந்தால் வந்த இடத்தில் இப்படியா நடப்பது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் சவாலாக விளங்குகிறார் ஜனாதிபதி


## கண்டிக்கிறார் அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)



குற்றமிழைக்கும் சகல இலங்கைப் பிரஜைகள் மீதும் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் போல ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி மேலும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், சாதாரண பிரஜை ஒருவர் இலங்கையின் குடிவரவு, குடியகல்வு சட்டவிதிகளை மீறி வெளிநாடு சென்றிருந்தால் எவ்வாறான சட்டநடவடிக்கை எடுக்கப்படுமோ அதே போல சோமவன்சஅமரசிங்க மீதும் பாரபட்சமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



குடிவரவு, குடியகல்வு சட்ட அதிகாரங்களை தன்னகத்தே கொண்ட உள்துறைஅமைச்சை தற்போது தன்வசம் கொண்டுள்ள ஜனாதிபதி பாராமுகமாக இருப்பது முறைகேடான ஒரு விடயம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நீதியுடன் செயற்படும் போது ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும். சட்டம், நீதி என்பது அனைவருக்கும் சமமானது என்பதை ஜனாதிபதி உணர்ந்திருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-4)

# கண்ணிவெடிகளை அகற்றும் 20 வீதமான பணிகள் பூர்த்தி

## பிரதமரின் செயலாளர் அறிக்கை

(கொழும்பு)

நாட்டில் சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ள போதும், கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையில், வெடிப்பொருள் அபாயம் உள்ளதாக இனம் காணப்பட்ட பிரதேசத்தின் 20வீத நிலப்பரப்பு தற்போது அபாயமற்ற பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது.

2006ஆம்ஆண்டு நிறைவில் 1.5 மில்லியன் கண்ணிவெடிகளை அகற்றுதல் என்ற திட்டத்தினை அரசாங்கம் தற்போது நல்ல முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ள ஆயிரத்திற்கு அதிகமானவர்களில் சுமார் 800 பேர் விடுதலைப்புலிகள் அமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்.

சில காலங்களுக்கு முன்னர்,கண்ணிவெடிகளின் தாக்கத்தை நாள் , ஒன்றுக்கு 15பேர் எதிர்கொண்டனர். தற்போது இத்தொகை 6 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை, கண்ணிவெடி அபாயம் நீங்கிய இடங்களில் 3 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர,இலங்கையின் கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கான உதவிகளை வெளிநாடுகள் சில அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## இராசிபலன்

**30. 01. 2004**

**(தை 16, வெள்ளிக்கிழமை)**

| | |
|---|---|
| நவமி | பின்னிரவு 5.30 மணிவரை |
| பரணி | பிற்பகல் 02.01மணிவரை |
| இராகுகாலம் | 2.06-3.36 மணிவரை |
| சுபநேரம் | 6.36-8.06 மணிவரை |

**கார்த்திகை விரதம்**

**மேடம்**
தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், உறவினரால் நன்மை, நல்ல சிந்தை.

**இடபம்**
மனக் கிலேசம், காரிய தடங்கல், கௌரவக் குறைவு, தன விரயம்.

**மிதுனம**
எதிர்பாராத நன்மை, பெரியோர் வெறுப்பு, காரிய சித்தி, தனஇலாபம்.

**கடகம்**
அதகாரம், கல்வியில் ஆர்வம், தொழில் சந்தை, வாக்குமேன்மை.

**சிங்கம**
புதிய திட்டமிடல், ரோக பயம், மனக்குழப்பம், காரிய தாமதம்.

**கன்னி**
மனக் கவலை, முயற்சி தடங்கல், போசன நன்மை, பிரயாண பயம்.

**துலாம்**
நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை, எடுத்த கருமங்கள் கைகூடும், தன இலாபம்.

**விருச்சிகம்**
நோய் குணமடைதல், சுவாரஷ்யமான சம்பவம், நல்ல முயற்சி, மேன்மை.

**தனுசு**
சொத்துக்களால் கவலை, உறவினர் சந்திப்பு, அதிக வார்த்தை, ரோக பயம்.

**மகரம்**
தெய்வ சிந்தை, கல்வியில் ஆர்வம், புதிய வீடயம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் உதவி, தொழில் விருத்தி, போசன சுகம்.

**மீனம்**
கடுமையான வார்த்தை, திடீர் நன்மை, வேலைக் கஷ்டம், காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## ரயில்வே ஊழியர்களின்

# பேச்சுவார்த்தை தோல்வி போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

அரசாங்கததிற்கும் ரயில்வே அதிகார சபைப் பிரதிநிதிகளுககும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

ரயில்வே அதிகார சபையை மீண்டும் ரயில்வே திணைக்களமாக மாற்றுமாறு கோரி 30ரயில்வே தொழிற் சங்கங்கள் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் வேலை நிறுத்தப் போராட்டம் செய்து வருகின்றன.

இதனால் பாடசாலை மாணவர்கள் அரச தனியார் உத்தியோகத்தர்கள், பொதுமககள் ஆகியோர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருவதுடன், பெருமளவு தபால் பொதிகளும் தேங்கிக் கிடக்கின்றன.

இருப்பினும் தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்படும்வரை வேலை நிறுத்தப் போராட்டம் தொடருமென ரயில்வே தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (தி-61)

## புத்தூர் பஞ்சசிக வித்தியாலயத்தில்

# 65 சதவீதமானோர் மெல்லக் கற்போர்

(இருபாலை)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 18 பாடசாலைகளில் ஆயிரத்து 736மெல்லக்கற்கும் மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 42 பாடசாலைகளில் 38 பாடசாலைகளே தற்சமயம் இயங்கி வருகின்றன.

அவற்றுள் 18 பாடசாலைகளை ஆய்வுக்குட்படுத்தியபோதே இத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக புத்தூர் பஞ்சசிக வித்தியாலயத்தில் 65 வீதத்தினரும், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் 60 விதத்தினரும், கோப்பாய் மகா வத்தியாலயத்தில் 48வீதத்தினரும், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 40 வீதத்தினரும் மெல்லக்கற்போர் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

(உ-84)

கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

-குறள்

வலம்புரி

## அடிக்கடி மாறும் புதிய கல்வித்திட்டம்

இலங்கையின் அண்மைக்காலக் கல்விச் செயற்பாடுகள் வெறுப்பைத் தருவனவாக அமைந்துள்ளன. இலவசக் கல்வி என்று பெருமைப்படும் அதேவேளை ஓர் நிலையான கல்விக் கொள்கை கடைப்பிடிக்கப்படாமையினால், மாணவர்களின் கல்விச் செயற்பாடும் மன நிலையும் பாதிப்படைகிறது.

புதிய கல்விச் சீர்திருத்தம் என்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கணிப்பீட்டு முறைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படுவதனால் மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் வரையான பாடசாலை நிர்வாகம் குழம்பிப்போயுள்ளது.

தவணைக்குத் தவணை, வருடத்துக்கு வருடம் மாற்றப்படும் கணிப்பீட்டு முறைகளால் மாணவர்கள் எந்த நன்மையையும் பெறமுடியாது மந்தகதியடைந்துள்ளனர்.

கடந்த காலங்களில், ஓர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதன் சாதக பாதக விளைவுகள் ஆராயப்பட்டு அதன் பின்னரே அத்திட்டம் அமுல்படுத்தப்படும். அவ்வாறு ஓர் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதாயின் அதன் இருப்பு ஓர் குறிப்பிட்ட காலத்தை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

ஆனால், இப்போதெல்லாம் அந்த நிலைமையில்லை. அரசியல்வாதிகளின் தலையீடு, கட்சிகளின் வெவ்வேறுபட்ட கல்விக் கொள்கை இவற்றினால் இலங்கையின் சமகாலக் கல்விமுறை இன்னமும் ஓர் திடமான நிலையின்றி தத்தளிக்கின்றது.

கல்விக் கொள்கையினை அரசியல் கலப்பின்றி நடைமுறைப்படுத்துவதற்கென தேசிய கல்வி நிறுவகம் அமைக்கப்பட்டபோதிலும் அதன் செயற்பாடுகள் ஆழ்ந்த கவலையைத் தருவனவாக உள்ளன.

கல்வித்திட்டத்தில் அறிமுகப்படுத்திய கணிப்பீட்டு முறைகள் ஒரு தெளிந்த முடிவோடு முன்வைக்கப்படவில்லை என்பதையும் கணிப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் அது உரிய முறையில் ஆராயப்படவில்லை என்பதையும், கணிப்பீட்டில் அடிக்கடி செய்யப்படும் மாற்றங்கள் உறுதிப்படுத்துகின்றன.

குறிப்பாக க.பொ.த. உயர்தர மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட கணிப்பீட்டு முறைகள் அடிக்கடி மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு உயர்தர மாணவர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டு முறைகளை அடிக்கடி மாற்றத்திற்குட்படுத்தும் போது அதில் ஓர் நம்பகத்தன்மையும் மாணவர்களுக்கு ஏற்படவே செய்யும்.

இது தவிர, உயர்தர மாணவர்களின் கணிப்பீடுகள், பரீட்சைகள் என்பனவற்றைப் பதிவு செய்வதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட மாணவர் பதிவேடுகள் - அதிலுள்ள விடைத்தானங்கள் என்பன எந்தவித முன்யோசனையுமின்றி அறிமுகப்படுத்தப்பட்டு வாபஸ் பெறப்படுகின்றது.

இதனால் மாணவர் பதிவுப் புத்தகத்தின் பெறுமதி வலுவிழந்து போகின்றது. இப்படியே கணிப்பீடுகள், பதிவேடுகளில் மாற்றங்களைச் செய்த கல்வி இலாகா கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பாடப்புத்தகங்களை மாற்றியது. ஆனால் அதிலும் ஓர் நிதானமான கொள்கையில்லை. இரண்டு வருட இடைவெளிக்குள் மீண்டும் தரம் ஆறுக்கான பாடப்புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இப்படியே கல்வித்திட்டங்கள் மாற்றப்படுமாயின் அதன் விளைவு மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாதிப்பதோடு அவர்களின் வினைத்திறனையும் வீழ்ச்சியடையச் செய்துவிடும். மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிகள் யாவும் போட்டிப் பரீட்சை மூலம் தீர்மானிக்கப்படும்போது செயற்திட்டங்கள் உச்சமடைந்திருந்தால் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் வெளியீட்டு மட்டம் குறைவடையவே செய்யும்.

இதனை கல்வி அதிகாரிகள் உணர்ந்து நிலைமையை உரிய இடங்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்.

# அத்துருகிரிய முகாம் விடயத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அடிப்படை உரிமையை மீறியுள்ளார்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவ உளவுப் பிரிவுமுகாமைச் சுற்றிவளைத்து அங்கிருந்த இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்ததன் மூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இராணுவக் கப்டன் முகமன் நிலாம் உட்பட உளவுப் பிரிவு அதிகாரிகள் ஐவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைமீறல் மனுவைப் பரிசீலித்த பின்னரே நேற்று உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு இராணுவ அதிகாரிக்கும் தலா ஏழரை இலட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கு மாறும் அரசாங்கத்திற்கு உயர்நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும், அடிப்படை மனித உரிமை மீறல்களை மீறியதாகக் குற்றம்சாட்டப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொலவை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு இராணுவ அதிகாரிகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கவேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், மிலேனியம் சிற்றி இராணுவமுகாமில் இருந்து இராணுவ அதிகாரிகளைக் கைது செய்து கொடூரமாக இம்சைப்படுத்தியமை தொடர்பாக சம்பந்தப்பட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் உடுகம்பொலவிற்கு எதிராக 'கொடூர இம்சைப்படுத்தல்' சட்டத்தின்கீழ் வழக்குத் தொடருமாறும் உயர்நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளது. (உ-60,10)

## பேய்க் கதையால் பரபரப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நரிக்குண்டு வீதிப் பகுதியில் பேய்கள் உலாவுவதாகவும் இரவு வேளையில் அவ்வீதியூடாகப் போவோர் வருவோரை பேய்கள் அடிப்பதாகவும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது.

நரிக்குண்டு வீதியில் உள்ள இராணுவ முகாம் மற்றும் பிள்ளையார் கோவில் ஆகியவற்றை அண்மித்த பகுதியால் இரவு வேளைகளில் பயணம் செய்த பலர் இனந்தெரியாதோரால் அடித்து விரட்டப்பட்டனர்.

வாழைத் தண்டுகள், முள்ளுத்தடிகள் என்பன தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இதேவேளை, மேற்படி பகுதியில் பேய்கள் உலாவுவதாகவும், அவைகளே இரவு வேளைகளில் பொதுமக்கள் மீது சேஷ்டை புரிவதாகவும் கதை பரப்பப்பட்டது.

இதனை நம்பிய மக்கள் மேற்படி வீதியை இரவு வேளைகளில் பயன்படுத்த அஞ்சினர். பகலில்கூட பரபரப்புடன் இவ்வீதியைப் பாவித்தனர்.

இதனை அவதானித்த அவ்வூர் முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள் சிலர், துணிந்து செயற்பட்டதன் மூலம் அப்பகுதியில் உலாவியவை பேய்கள் அல்ல, தண்மண் தெரியாது கசிப்பை அருந்திவிட்டு ரகளையில் ஈடுபடும் கும்பல் என்பது தெரியவந்துள்ளது.

தற்போது இக்கும்பலின் கொட்டத்தை அடக்கும் முயற்சியிலும் இவ் இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (உ-51)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம், பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லை நாவலர் மணிமண்டபத்தில் நடாத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'தைப்பூசத்தின் மகிமை' எனும் விடயம் பற்றி இராமநாதன் கல்லூரி ஆசிரியரும் சைவப் புலவருமான கந்தசத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-10)

## ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழக ஆரம்பவிழா

(கொழும்புத்துறை)

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத்தின் தொடக்கவிழா எதிர்வரும் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரைகளை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக் கழக ஊடக வளங்கள் பயிற்சித்துறை ஆலோசகர் எஸ். அருட்செல்வன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ-51)

### ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீ எல்லை அற்றவன், மரணமற்றவன், பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால், நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு! விழித்துக் கொள். எழுந்து நின்று போராடு. நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்து விடு.

**சுவாமி விவேகானந்தர்**

## நியாப் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 30 கிராமங்களுக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 30 கிராமங்களில் கடன்திட்டம் அமுல்செய்யப்படவுள்ளது.

சிறு கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில், சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் 5இலட்சம் நிதி இத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே சமூகவலுவூட்டல் செய்யப்பட்ட 20 கிராமங்களில் இத்திட்டம் உடனடியாக செயற்படுத்தப்படவிருப்பதாக நியாப்திட்ட யாழ். மாவட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-19,3)

## பறவைக் காய்ச்சலைத் தடுக்க இலங்கையிலும் உரிய நடவடிக்கை

(கொழும்பு)

ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு இலங்கை அரசாங்கம் தடைவிதித்துள்ளது. தாய்லாந்து உள்ளிட்ட சில ஆசிய நாடுகளில் உள்ள கோழி இனங்களிடையே பறவைக் காய்ச்சல் எனும் புதுவித நோய் பரவிவருகின்றது. இது கோழிகளுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நோயின் தாக்கத்திற்கு இலக்காகிய 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட வளர்ப்புக் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், நோய்த்தாக்கத்தால் இரு வெளிநாட்டவர்களும் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான கொடிய நோய் இலங்கையில் பரவுவதைத் தடுக்கவே இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுல்படுத்தப்பட்ட இத்தடையுத்தரவின் கீழ் ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் கோழி இறைச்சி வகைகளும், அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பண்டங்களும், கோழி முட்டைகளும் அவற்றிலிருந்து உற்பத்திசெய்யப்படும் உணவுப்பண்டங்களும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், இத்தடை மறு அறிவித்தல்வரை நீடிக்கும்எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பறவைக்காய்ச்சல் நோய்த்தாக்கம் நிலவிவரும் நாடுகளில் இருந்து வருபவர்களை எந்தவித காரணங்களுக்காகவும் கோழிப்பண்ணைகளுள் அனுமதிக்க வேண்டாம் என உள்ளூர் பண்ணைக்காரர்களிடம் விலங்கு சுகாதாரத்துறைத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (உ-4)

## குடாநாட்டில் குடிசை வீடுகள் இல்லை என்ற நிலை விரைவில் வரும்

### இந்து கலாசார அமைச்சர் நம்பிக்கை

(இணுவில்)

இன்னும் 3 ஆண்டுகள் எமது அரசு ஆட்சியில் இருக்குமானால் யாழ். மாவட்டத்தில் உள்ள கொட்டில் குடிசைகள் அனைத்தும் கல் வீடுகளாக மாற்றப்பட்டுவிடும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் மிகவும் சேதமடைந்துள்ள யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திப் பணிகளை துரித கதியில் மேற்கொண்டு இங்கு சகல வசதிகளையும் உள்ளடக்கியதான சுமுக வாழ்வை ஏற்படுத்துவதே எனது நோக்கமாகும் என இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

2ஆவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக இந்து கலாசார அமைச்சினால் மட்டுவில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை அண்மையில் திறந்துவைத்து உரையாற்றும்போதே அமைச்சர் மகேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

கடந்தகால யுத்தத்தினால் அழிவுக்குள்ளாகியுள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவேண்டுமாயின், அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்படவேண்டும்.

கடந்த 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் யாழ். குடாநாட்டைப் பார்த்ததற்கும் தற்போது பார்ப்பதற்கும் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. யுத்த நடவடிக்கைகளால் இங்கு பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை மீண்டும் புனரமைப்புச் செய்யவும், அபிவிருத்தியடையச் செய்யவுமான பொறுப்பு எனக்கு உண்டு.

இதன் ஓர் அங்கமாகவே தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 20 வீடுகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன், இப் பிரதேசத்தில் உள்ள 4 கிராம அலுவலர் பிரிவுகளிலும் தலா 40 வீடுகள் என்ற அடிப்படையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இவற்றிற்குச் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார். (உ-122)

# யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடம்



(ஊர்காவற்றுறை)

கடந்த மாதம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் தோற்றிய யாழ்.புனித ஜோன் பொஸ்கோ மாணவனான விஜயரட்ணம் விதுஷன் 172 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

இவர் வேலணை புளியங்கூடலைச் சேர்ந்த கிராமசேவையாளரான மு.விஜயரட்ணம், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியை சாந்தினி ஆகியோரின் புதல்வராவார். இம் மாணவன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள், நாடகம், பேச்சு, கவிதை எழுத்தாக்கம் போன்றவற்றில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-75)

## ஐ.தே.முன்னணியை...

யெழுப்பி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்று வளங் கொளிக்கும் நாடாக்குவதே இப் புதிய கூட்டு முன்னணியின் பிரதான நோக்கமாகுமென்றும் சோமவன்ச அமரசிங்க அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமுகமளிக்காத போதும் விசேட செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதில் நாட்டின் தேசிய பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்றைக் காண ஐக்கிய சுதந்திர முன்னணியால் முடியும்.

கொள்கையடிப்படையில் பல வேறு கருத்து வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்தது மாபெரும் வெற்றியாகுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச் செய்தியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா அவர்கள் கூட்டத்தில் வாசித்தார்.

இக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் கூட்டமைப்புடன் இணைந்த கட்சிகளின் பிரதிநிகளும் கலந்து கொண்டனர். (ம)

# ஆர்ப்பாட்டம்

(திருநெல்வேலி)

எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தம்மை தமது பாடசாலைகளில் கற்க அனுமதிக்குமாறு கோரி நேற்றைய தினம் சாவகச்சேரி வலயக் கல்விப் பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் மாணவர்களுடன் பெற்றோரும் ஈடுபட்டனர். (ந-43)

# அமைச்சர் மிலிந்த ஐரோ. விஜயம்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் ஐரோப்பாவுக்கு பயணமாகியுள்ளார்.

சுவீடன், சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை மொறகொட முதற்கட்டமாகச் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார். (இ-3)

## சத்திரச்...

அவதானிப்பதற்காக மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகரா தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்றனர். அங்கு பிரஸ்தாப பொலிஸார் ரகளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததையடுத்தே யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## குடும்பஸ்தரை...

பின்னர் அங்கிருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த-19)

## மனோ...

சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதியுதவியளிக்கும் மாநாட்டிற்கு முன்பதாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் பிணக்கு முடிபுக்கு வருமெனத் தாம் நம்புவதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 23ந் திகதியும் மனோ-மலிக்குழு கூடி ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## இனப்பிரச்சினை...

பேசுவதென்பது சாத்தியப்படாது. புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரோடும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பேச்சுக்கள நடத்தப்படுமென்று மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இக் கூட்டத்தில் உரையாற்றிய அனுரா பண்டாரநாயக்கா தனது உரையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் கூட்டிணைப்பை ஏற்படுத்த முடியுமானால், ஜே.வி.பியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமைப்பை ஏற்படுத்தியதில் என்ன தவறு இருக்கின்றதென்று கேள்வியெழுப்பினார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் நாட்டை அழிவிலிருந்து மீட்பதற்காகவே கூட்டுச் சேர்ந்துள்ளது என்றும் அனுரா தெரிவித்தார். (இ-3)

## மிலேனியம்...

றுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதற்காக பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம்பொல மனுதாரர் ஒவ்வொருவருக்கும் தனது சொந்தப்பணத்தில் தலா 50 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும் அதேவேளை அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் தலா 75 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளது. (ச)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472

## போட்டிப் பரீட்சை

(ஊர்காவற்றுறை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை நாளை சனிக்கிழமை கொழும்பு மாலபே ஸ்ரீராகுல மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பதவிக்கு சமுர்த்தி அதிகாரசபையில் கடமையாற்றும் உத்தியோகத்தரிடம் இருந்து தகுதி அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச-75)

## மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிதொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறவுள்ள இம் மருத்துவ முகாமின் போது கண் பரிசோதனை, பொது வைத்திய பரிசோதனை, இரத்த அழுத்தம், நீரிழிவு, சர்ம வியாதிகள் போன்ற நோய்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச)

1in COM, G.A.Q
யாழ்ப்பாணம், பேராதனை இவற்றிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.
A/Lல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 3பாடங்கள் சித்தியடைந்த மாணவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.
குறிப்பு : பேராதனை பல்கலைக் கழக பதிவுகள் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. சகல பதிவுகளும் எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்.
நிர்வாகி
-அருள்நங்கை-
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்
(சி-7323)

நடிகர், நடிகைகள் தேவை
வெகு விரைவில் யாழ்.மண்ணில் தயாரிக்கப்பட இருக்கும் சின்னத்திரைக்கு நடிப்புத் திறமையும் ஆவலும் கொண்ட நடிகர், நடிகைகள் தேவை. அண்மையில் எடுத்த மூன்று புகைப்படங்களுடன் மற்றும் நற்சாட்சி ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.
காலம்: 02-02-2004திங்கட்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: ஜெசித்தாரா கட்டிடம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.
(C/7322)

சங்குநாதம்


இன்று உங்கள் சங்குநாதம்
அன்பு வாசகர்களே!
திங்கள் தோறும் உங்கள் கைகளில் தவழ்ந்த சங்குநாதத்தை புதுப் பொலிவுடன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்
சங்குநாதம்

தொழிற் பயிற்சிகள்
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பை பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
Radio, T.V, VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ.வீ, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer,Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன மோட்டார், (F)பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும் (காலம் 7 மாதங்கள்)
AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர் சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும் (காலம் 7 மாதங்கள்)
புதிய பயிற்சிகள் ஆரம்பம்
06-02-2004 (கிழமை நாட்களில்)
07-02-2004 (சனி, ஞாயிறு நாட்களில்)
தனிப்பட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன
மேலதிக விபரங்களுக்கு;
JAFFNA TECHNICAL INSTITUTE
-DIRECTOR
ANNIVERSARY
தலைமை அலுவலகம் : No.367, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம் T.P : 222 3335
கிளை: இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(சி-7323)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.